UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

# பகுதி 4

**இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1979 ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்**


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கைத்தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டம் | (i) |
| 2. | 1979 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பணச்சட்ட (திருத்தம்) சட்டம். | (xxxv) |
| 3. | 1979 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வங்கிப் பற்றுக்கள் வரி (நீக்கச்) சட்டம். | (xxxvi) |
| 4. | 1979 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம். | (xxxvii) |
| 5. | 1979 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, இலங்கை வங்கித் தொழிலர் நிறுவக (கூட்டிணைத்தற்) சட்டம். | (Lii) |
| 6. | 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக் கோவைச் சட்டம் | (Lvi) |
| 7. | 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க கமநலச் சேவைகள் சட்டம் | (Lvii) |
| 8. | 1979 ஆம் ஆண்டின் 71 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம். | (Lxi) |

## 1979ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க
## இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டம்

*(1979, சனவரி மாதம் 5ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 1979ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். அத்தேதி இதனகத்துப் பின்னர் ''நியமித்த தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்.

### பாகம் I

### இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியின் அமைப்பும், தத்துவங்களும், அதன் பணிப்பாளர் சபையும்

2. நியமித்த தேதியன்று அல்லது அதன்பின்னர் இயன்றளவு விரைவாக ''இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி'' என அழைக்கப்படும் வங்கியொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; அது இதனகத்துப் பின்னர் ''வங்கி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்; அவ்வங்கி அப்போதைக்கு வங்கியின் பங்குதாரர்களாக இருக்கும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. வங்கியானது 2ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடைவருவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாயிருத்தலும் வேண்டும்; அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

4. வங்கியின் தலைமை அலுவலகம் கொழும்பில் இருத்தல் வேண்டும். பணிப்பாளர் சபை அவசியமானதெனக் கருதக்கூடியவாறாக வங்கியின் அத்தகைய கிளை அலுவலகங்கள், இலங்கையில், கொழும்பு தவிர்ந்த ஏனைய இடங்களில் தாபிக்கப்படலாம்.

5. (1) வங்கியின் நோக்கங்களாவன, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க —

(அ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கும் வேறு தொழில் முயற்சிகளுக்கும் நடுத்தர காலக் கடனுக்கும், நீண்டகாலக் கடனுக்கும் ஏற்பாடு செய்வதன் மூலமும், அவற்றிற்கு வேறு வகையிலான உதவிகளை அளிப்பதன் மூலமும்;

(ஆ) இலங்கையின் முதலீட்டையும், பங்குச் சந்தைகளையும், பிணைப்பொறுப்புச் சந்தைகளையும் மேலும் அபிவிருத்தி செய்வதனை ஊக்குவிப்பதன் மூலமும்;

(இ) உள்நாட்டு, வெளிநாட்டு மூலதனத்தை, கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில் முயற்சிகளிலும் வேறு தொழில் முயற்சிகளிலும் முதலீடு செய்வதற்கெனப் பயன்படுத்துவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) இலங்கைப் பொருளாதாரத்தின் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக அபிவிருத்தியையும் வேறு அபிவிருத்தியையும் மேம்படுத்துவதில் ஈடுபடுவதன் மூலமும்,

இலங்கைப் பொருளாதாரத்தின் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக அபிவிருத்தியையும் வேறு அபிவிருத்தியையும், மற்றவற்றுக்கிடையில் கிராமப்புற அபிவிருத்தியைக் கவனத்திற்கொண்டு மேம்படுத்துதல் ஆகும்.

(2) வங்கியானது அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதில், அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு நிறுவனங்களுடன் கலந்தும் இணைந்தும் செயலாற்றுதல் சாத்தியமானதாகவும் விரும்பத்தக்கதாகவும் இருக்கும்போதெல்லாம், அவ்வாறே செயலாற்றுதல் வேண்டும்.

6. இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைய, வங்கி அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதில் பின்வரும் எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம் :—

(அ) கைத்தொழிலில், கமத்தொழிலில் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடவுள்ள எவையேனும் தொழில் முயற்சிகளுக்குக் கடன்களும் முற்பணங்களும் வழங்குவதற்கான தத்துவம்;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு நிறுவனங்களிடமிருந்து கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில்முயற்சிகளினால் பெறப்பட்டுள்ள அல்லது பெறப்படவுள்ள கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கான தத்துவம்;

(இ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில் முயற்சிகளின் மூலதன வழங்கல்களைப் பொறுப்பேற்பதினால் நிதி நிறுவனங்களுக்கு எழும் கடன்பாடுகளுக்கு உத்தரவாதமளிப்பதற்கான தத்துவம்;

(ஈ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில் முயற்சிகளை ஒப்புரவாக்குவதில் பங்குகொள்ளுவதற்கான தத்துவமும், அத்தகைய எவையேனும் தொழில் முயற்சிகளின் கையிருப்புக்களை, பங்குகளை, முறிகளை அல்லது கடனீட்டுப்பத்திரங்களை வழங்குவதற்கென ஒப்பப்பணத்தொகை செலுத்துவதற்கான அல்லது அவற்றைக் கொள்வனவு செய்தவற்கான அல்லது பொறுப்பேற்பதற்கான தத்துவமும், அத்தகைய பிணைப்பொறுப்புக்களை விற்பனை செய்வதற்கும் கையாளுவதற்குமான தத்துவமும்;

(உ) அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு நிறுவனங்களினாலும் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிறுவனங்களினாலும் கைத்தொழில்,

கமத்தொழில் வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள எவையேனும் கடன்களை அல்லது முற்பணங்களைத் தீர்ப்பதற்கு மீள நிதியுதவியளிக்கும் வகையில் கடன்களையும், முற்பணங்களையும் வழங்குவதற்கான தத்துவம்; அத்துடன் அந்நோக்கத்திற்கென, அத்தகைய வங்கிகளினாலும் நிறுவனங்களினாலும் வழங்கப்படும் கடன்களின் முதிர்வுக்கான ஆகக்குறைந்த காலப்பகுதியையும் ஆகக்கூடிய காலப்பகுதியையும் நிர்ணயிப்பதற்கான தத்துவம்;

(ஊ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கு வங்கியின் நோக்கங்களைத் திருப்திப்படுத்துவனவும் அதன் பணிகளுள் அடங்குவனவுமான தொழில் நுட்ப ஆலோசனை, நிருவாக ஆலோசனை போன்ற அத்தகைய சேவைகளையும் வேறு உதவிகளையும் அளிப்பதற்கான தத்துவம்;

(எ) வங்கித்தொழில் தொடங்கியதன் பின்னரான ஐந்து ஆண்டுக் காலத்தின்போது, (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சேவைகளைக் கொடுத்துதவுவதில், அதன் செலுத்தப்பட்ட முதலின் இரண்டு சதவீதத்தை விஞ்சாதவொரு தொகை வரையிலான செலவினத்தை, அது ஈடுசெய்யப்படற்குரியதல்ல என்னும் அடிப்படையில் உறுவதற்கான தத்துவமும், அதன் பின்னர், அத்தகைய சேவைகளைத் தொடர்ந்து அளிப்பதில் உறப்படும் செலவினத்தை, அவசியமாகுமிடத்து அது ஈடுசெய்யப்படற்குரியதல்ல என்னும் அடிப்படையில், வங்கியின் நிதிகளின்மீது பொறுப்பாக்குவதற்கான தத்துவமும் ;

(ஏ) வங்கியின் நோக்கங்களை நிறைவேற்றுவதிலும் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும், கடமைகளைப் புரிவதிலும் வங்கிக்கு உதவுவதற்கெனத் துணைநிலைக் கம்பனிகளைத் தாபிப்பதற்கான தத்துவம் ;

(ஐ) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில் முயற்சிகளும், வேறு தொழில் முயற்சிகளும் தாபிக்கப்படுவதனை மேம்படுத்துவதற்கான தத்துவம் ;

(ஒ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை அல்லது ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் .தொழில் முயற்சியை அல்லது வேறு தொழில் முயற்சியைக் கொள்ளுவதற்கான அல்லது கொள்வனவு செய்வதற்கான தத்துவமும், அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில் முயற்சியை முகாமை செய்வதற்கான அல்லது முகாமை செய்வதற்கு ஒழுங்கு செய்வதற்கான தத்துவமும், அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில் முயற்சியை விற்பனை செய்வதற்கான அல்லது வேறு வகையில் கையாளுவதற்கான தத்துவமும் ;

(ஓ) வங்கியின் நிதிகளை வெளிநாட்டுப் பிணைப்பொறுப்புக்களில் தற் காலிகமாக முதலீடு செய்வதற்கான தத்துவம் ;

(ஔ) கடன்கள், ஒப்புரவாக்குதல், பொறுப்பேற்றல் ஒழுங்குகள், உத்தர வாதங்கள் என்பனவற்றில் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கு நிறு வனங்களுடன் பங்குபற்றுதல் ;

(க) பணிப்பாளர் சபையினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்த கைய நிபந்தனைகளுக்கு அமைய கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழிற் முயற்சிகளின் நாணயமாற்றுண்டியல்களையும் வாக்குறுதிப்பத்திரங்களையும், உரிமைச்சீட்டுக்களையும், உண்டியல் களையும், கடனீட்டுப்பத்திரங்களையும், சான்றிதழ்களையும், பங்குச் சான்றிதழ்த் தொகுதிகளையும் வேறு சாதனங்களையும், பிணைப் பொறுப்புக்களையும், அவை கைமாற்றத்தக்கனவாக அல்லது மாற்றத்தக்கனவாகவிருப்பினுஞ்சரி அவ்வாறு இல்லாவிடினுஞ்சரி, ஏற்றுக்கொள்வதற்கும், கழிவு கொடுப்பதற்கும, மீறக் கழிவு கொடுப்பதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும் கையாளுவதற்கு மான தத்துவம் ;

(ங) வங்கியின் நோக்கங்களை எய்துவதற்கென முன்னேடிக் கருத்திட்டங் கள் உட்பட்ட வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொள்ளு வதற்கான தத்துவம் ;

(ச) கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக முயற்சிகளுக்குத் தேவைப் படும் குதங்களையும், கிடங்குகளையும், பண்டசாலைகளையும் கட்டி டங்களையும் அமைப்பதில் ஈடுபடுவதற்கான தத்துவம் ;

(ஞ) குதங்களையும், கிடங்குகளையும், பண்டசாலைகளையும், கட்டிடங்களை யும், எந்திரத்தொகுதிகளையும், சாதனங்களையும் வேறு சாமான களையும் குத்தகைக்குக் கொடுப்பதற்கான, வாடகைக்கு விடுவதற் கான, முழுமையாக விற்பதற்கான அல்லது வாடகைக் கொள் வனவு அடிப்படையில் விற்பதற்பான தத்துவம் ;

(ட) ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில் அல்லது வர்த்தகத் தொழிற் முயற்சியினுல் பெறப்பட்டனவும், பகிரங்க சந்தையில் திரட்டப்பட்டனவுமான கடன்களுக்கு உத்தரவாதமளிப்பதற்கான தத்துவம் ;

(ண) ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில் அல்லது வர்த்தகத் தொழில் முயற்சியிடமிருந்து வருமதியாகவுள்ள பின்போடப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உத்தரவாதமளிப்பதற்கான தத்துவம் ;

(த) கைத்தொழில், கமத்தொழில், அல்லது வர்த்தகத் தொழில் முயற்சி களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின் ஒரு பகுதியை அல்லது, கடன்கள் முழுவதையும் அத்துடன் அத்தகைய ஏதேனும் தொழில் முயற்சியினுல் வழங்கப்பட்ட முறிகளுக்கான அல்லது கடனீட்டுப் பத்திரங்களுக்கான வங்கியின் ஒப்பப் பணத்தொகைகளையும் ஒப்புர வாக்குதல் மூலதனத்திற்கு மாற்றுவதற்கான தத்துவம் ;

(ந) அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கு நிறுவனங்களின் பங்குத்தொகுதியின், பங்குகளின், முறிகளின் அல்லது கடனீட்டுப் பத்திரங்களின் வழங்கலுக்கு ஒப்பப்பணத்தொகை செலுத்துவதற்கான அல்லது அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான அல்லது பொறுப்பேற்பதற்கான தத்துவம் ;

(ப) வங்கியினல் புரிபப்படும் பணிகளுக்கெனப் பணிப்பாளர் சபையினல் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறன அத்தகைய தரகுக்கூலியை, தரகுப்பணத்தை, வட்டியை, ஊதியத்தை, அல்லது கட்டணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான தத்துவம் ;

(ம) மத்திய வங்கியில், ஏதேனும் வர்த்தக வங்கியில். அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் வைப்புக்கணக்குகளைத் தொடங்குவதற்கான தத்துவம் ;

(ய) பணிப்பாளர் சபையினல் தீர்மானிக்கப்படக்கூடியவாறன அத்தகைய தொகையிலும், அத்தகைய காலப்பகுதிக்கும் எவரேனும் ஆளிடமிருந்து தவணைக்கால வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான தத்துவம் ;

(ர) கடன் பத்திரங்களையும் சுற்றுக் குறிப்புகளையும் வழங்குவதற்கும் விடுப்பதற்குமான தத்துவம் ;

(ல) பொற்கட்டிகளையும் நாணயங்களையும் வாங்குவதற்கும், விற்பதற்கும், கையாளுவதற்கும் ஆன தத்துவமும், நாணயமாற்றுத் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்கான தத்துவம்; அத்துடன்

(வ) பொதுவாக, இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் வங்கியின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதுடன், நிறைவேற்றுவதுடன் அல்லது புரிவதுடன் தொடர்புபட்ட அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் அல்லது அவற்றை முன்னேற்றுவதற்கான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்வதற்கான தத்துவம்.

7. வங்கி, பின்வரும் எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எவற்றையும பிரயோகிக்கலாம்: –

(அ) பொது முகாமையாளர் ஒருவரை நியமிப்பதற்கான தத்துவம்; அப்பொது முகாமையாளர் வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) வங்கியின் வேலையை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறன அத்தகைய வேறு அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கான தத்துவம்;

(இ) வங்கியினல் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களுக்குச் சகாய நிதியமொன்றைத் தாபிப்பதற்கும், நலன்புரி வசதிகளுக்கும், பொழுதுபோக்கு வசதிகளுக்கும், வீடுகளுக்கும் விடுதிகளுக்கும் அவைபோனற வேறு உறைவிட வசதிகளுக்கும் ஏற்பாடு செய்வதற்கும் ஆன தத்துவம்;

(ஈ) இலங்கைக்குள்ளேயாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி, வங்கியின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதன் கடமைகளைப் புரிவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து கொள்வதற்கும் அவற்றை நிறை வேற்றுவதற்குமான தத்துவம்;

(உ) அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம், பதவி யுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு, நடத்தை, அவர் களுக்கு லீவு வழங்குதல் என்பன உட்பட, அவர்கள் தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கான தத்துவம்;

(ஊ) வங்கியின் அலுவல்களை நிருவகிப்பது தொடர்பில் விதிகளை ஆக்கு வதற்கான தத்துவம்: அத்துடன்

(எ) பணிப்பாளர் சபையின் அபிப்பிராயப்படி, வங்கித் தொழிலைத் தகுந்த முறையில் கொண்டு நடாத்த உதவுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாவற்றையும் செய்வதற்கான தத்துவம்.

8. (1) வங்கி, பின்வருபவர்களைக் கொண்டவொரு பணிப்பாளர் சபையை உடையதாகவிருத்தல் வேண்டும் :—

(அ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள்; அவர் இச்சட்டத்தில், ''பதவிவழிப் பணிப்பாளர்'' எனக் குறிப் பீடு செய்யப்படுவார் ;

(ஆ) அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பணச் சபையினால் நியமிக்கப்படும் மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ஒருவர் ;

(இ) அமைச்சரின் ஒருப்பாட்டுடன் இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் இலங்கை வங்கியின் சிரேட்ட அலு வலர் ஒருவர் ;

(ஈ) அமைச்சரின் ஒருப்பாட்டுடன் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் மக்கள் வங்கியின் சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(உ) அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இரு ஆட்கள் ;

(ஊ) அரசாங்கம் தவிர்ந்த, மத்திய வங்கி தவிர்ந்த, இலங்கை வங்கி தவிர்ந்த, மக்கள் வங்கி தவிர்ந்த, அத்துடன் பங்குபற்றுவோர் எவரேனுமிருப்பின் (அந்தப் பங்குபற்றுவோரின் பங்கு மூலதனத் திற்கான ஒப்பப் பணத்தொகை வங்கியின் செலுத்தப்பட்ட மொத்த மூலதனத்தின் பத்து சதவீதத்தை விஞ்சுதலாகாது) அந்தப் பங்குபற்றுவோர் தவிர்ந்த பங்குதாரர்களினால் தெரிவு செய்யப் படுபவரான வேறு உறுப்பினர் ஒருவர்; அவர் இச்சட்டத்தில் "தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார் ;

ஆயின், எவ்வாறுயினும், பங்கு மூலதனத்திற்கான அவர்களது ஒப்பப்பணத்தொகை, வங்கியின் செலுத்தப்பட்ட மொத்த மூல தனத்தின் பத்து சதவீதத்திலும் குறைவாகவிருக்குமிடத்து, அமைச்சர், அப்பங்குதாரர்களின் அக்கறைகளை அல்லது அவர் அவசிய மானதெனக் கருதக்கூடியவாறான வேறு எவையேனும் அக்கறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கெனப் பணிப்பாளர் ஒருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) முதல் (ஈ) வரையிலான பந்திகளின் கீழ் (இவ்விரண்டு பந்திகளும் உட்பட) பணிப்பாளர்களாக நியமிக்கப்படும் ஆட்கள், இச்சட்டத்தில் ''நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள்'' எனவும், இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழும் (ஊ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்திலும் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆட்கள், இச்சட்டத்தில், 'பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள்'' எனவும் குறிப்பீடு செய்யப்படுவார்கள்.

(3) பதவிவழிப் பணிப்பாளர் இல்லாதவிடத்து, திறைசேரியின் பிரதிச் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள், அவ்வுறுப்பினருக்குப் பதிலாகச் சபைக் கூட்டங்களின்போது செயலாற்றுதல் வேண்டும் என்பதுடன், அக்கூட்டத்தின்போது வாக்களிப்பதற்கான உரிமையுடையவராதலும் வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு உடற்குறைபாடு காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து, சபைக்கூட்டங்களில் அவருக்குப் பதிலாகச் செயலாற்றுவதற்கென நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களின் விடயத்தில் நியமன அதிகாரியும், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களின் விடயத்தில் அமைச்சரும், பொருத்தமான ஆள் ஒருவரை நியமிக்கலாம் அல்லது பெயர் குறித்து நியமிக்கலாம் அத்துடன் அத்தகைய ஆள், அக்கூட்டத்தின்போது வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலும் வேண்டும.

(5) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரை அமைச்சர், காரணம் எதுவும் குறிப்பிடாமலே பதவியிலிருந்து அகற்றலாம். அவ்வாறு அகற்றுதல் நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்டுத்தப்படலாகாது.

(6) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(7) ஆறும், ஏழாம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாதல் வேண்டும்.

9. (1) வங்கியின் அலுவல்கள். தொழில் ஆகியவற்றின் பொதுவான கண்காணிப்பும், நெறிப்பாடும், கட்டுப்பாடும், பணிப்பாளர் சபைக்குரித்தாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் சபை இச்சட்டத்தின் கீழான அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான வங்கியின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம் என்பதுடன், இச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் வங்கியினுல் புரியப் படக் கூடிய எல்லாச் செயல்களையும்' காரியங்களையும் புரியலாம்.

(3) பணிப்பாளர் சபை, அதன் தத்துவங்களையும், பணிகளையும் கடமை களையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, திடமான வியாபாரநெறிகளுக்கு இணங்கச் செய லாற்றுதல் வேண்டும் என்பதுடன், கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக நலன்களையும், பொதுவாகப் பொதுமக்கள் நலனையும் கருத்திற்கொள்ளுதலும் வேண்டும்.

10. எல்லாப் பணிப்பாளர்களுக்கும் அல்லது அவர்களுள் எவருக்கேனும், வங்கியின் நிதிகளிலிருந்து அமைச்சரினுல் தீர்மானிக்கப்படக் கூடியவாறன அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

11. வங்கியினுல் வழங்கப்படவுள்ள எவையேனும் கடன்களில், அல்லது செய்துகொள்ளப்படவுள்ள ஏதேனும் ஒப்பந்தத்தில் நேரடியாகவோ மறை முகமாகவோ அக்கறைகொண்டுள்ள பணிப்பாளர் ஒருவர், அவரது அக் கறையின் தன்மையினைப் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றின்போது வெளி விடுதல் வேண்டும். அத்தகைய வெளிவீடுகை கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புக் களில் பதியப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்பந்தம் தொடர் பிலான அத்தகைய சபையின் கலந்தாராய்வு அல்லது முடிவு எதிலும் அத்த கைய பணிப்பாளர் பங்குபற்றுதலும் ஆகாது.

12. (1) பணிப்பாளர் சபையின் கூட்டங்கள், குறைந்தபட்சம் மாத மொருமுறையேனும் நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், மேலும் இச் சட்டத்தின் கீழான அதன் பொறுப்புக்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறு அடிக்கடி நடாத்தப்படலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் சபையின் எக்கூட்டத்திலும் நான்கு பணிப்பாளர்கள் கூட்ட நடப்பெண்ணுக அமைதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைய, பணிப்பாளர் சபையின் கூட்டங்களின்போது அலுவல்களைக் கையாளுவது தொடர்பில் பின் பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையானது பணிப்பாளர் சபையினுல் ஆக்கப்படும் விதிகளினுல் தீர்மானிக்கப்பட்டவாறுக இருத்தல் வேண்டும்.

13. (1) பணிப்பாளர் சபை, அதன் தத்துவங்கள், கடமைகள் என்ப வற்றுள் எதனையும் வங்கியின் பொது முகாமையாளருக்கு அல்லது வேறு எவரேனும் ஊழியருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பேராளர் ஒவ்வொரு வரும், தமக்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவத்தை அல்லது கடமையைப் பணிப்பாளர் சபையின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களுக்கு அமைய, பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்

14. பணிப்பாளர் சபையில் வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக மட்டும், அல்லது பணிப்பாளர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு எதுவும் இருப்பதன் காரணமாக மட்டும், பணிப்பாளர் சபையின் செயல் அல்லது நடவடிக்கை ஏதுவும் செல்லுபடியற்றதெனக் கருதப்படுதல் ஆகாது.

15. (1) அமைச்சர், பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களிலிருந்து தவிசாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளரின் பதவிக்காலமானது, (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய அவரது நியமனத் தேதியன்று தொடங்கும் நான்கு ஆண்டுக் காலப்பகுதியாதல் வேண்டும்.

(3) தவிசாளரின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர் பதவியைத் துறக்குமிடத்து, அவ்வாறு பதவிதுறந்த தவிசாளரின் முடிவுறு தெஞ்சியுள்ள பதவிக்காலத்தின்போது அப்பதவியை வகிப்பதற்கென வேறு ஆள் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) காலம் கழிவதன்மூலம் தவிசாளர் என்ற பதவியை வறிதாக்கும் ஆள் எவரும் மீளநியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(5) அமைச்சர், காரணம் எதுவும் குறிப்பிடாமல் தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்; அவ்வாறு அகற்றுதல் நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படலாகாது.

(6) பணிப்பாளர்சபையின் ஏதேனும் கூட்டத்தின்போது தவிசாளர் இல்லாதிருக்குமிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்திருக்கும் உறுப்பினருள் பெரும்பான்மையோரினல் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் ஒருவர். கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(7) சபையின் ஏதேனும் கூட்டத்தின்போது தலைமைதாங்கும் பணிப்பாளர் சபையின் தவிசாளர் அல்லது வேறு உறுப்பினர் தமது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக, அறுதியிடும் வாக்கொன்றினை உடையராதல் வேண்டும்

16 (1) வங்கியின் இலச்சினை பொதுமுகாமையாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) வங்கியின் இலச்சினை, பணிப்பாளர் சபையினல் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) வங்கியின் இலச்சினை, பொதுமுகாமையாளரதும். அல்லது பதில் பொதுமுகாமையாளரதும் இரு பணிப்பாளர்களதும் முன்னிலையிலன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் அனைவரும் தாம் சமூகமளித்திருந்தனர் என்பதற்கடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

17. (1) பணிப்பாளர் சபையானது, வங்கியின் முகவர்களை இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியேயும் நியமிக்கலாம்.

(2) இலங்கைக்குள்ளும், இலங்கைக்கு வெளியேயும் ஏனைய நிறுவனங்களின் முகவராக வங்கி செயற்படலாம்.

18. (1) பணிப்பாளர் சபையானது, அத்தகைய சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் கடமைகளைப் புரிவதிலும் அதற்கு உதவும் நோக்கத்துக்கும் ஆலோசனையளிக்கும் நோக்கத்துக்கும் அவசியமானதெனத் தாம் கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்ட விசேட குழுக்களை நியமிக்கலாம்

(2) ஏதேனும் விசேட குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகைமையுடைய ஆட்கள், பணிப்பாளர்சபையின் உறுப்பினர்களாகவும் வங்கி ஊழியர்களாகவும், அத்தகைய நியமனத்திற்குத் தகைமையுடையவர்களெனப் பணிப்பாளர் சபை கருதும் அத்தகைய வேறு ஆட்களாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய எவரேனும் உறுப்பினரின் பதவிக்காலம் அத்தகைய சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்

19. ஏதேனும் விசேட குழுவின் உறுப்பினர் ஒருவராகவுள்ளவரும் வங்கியின் எலரேனும் அலுவலரல்லாதவருமான அத்தகைய குழுவின் உறுப்பினர்களுக்கு அத்தகைய எவையேனும் குழுக்களின் கூட்டங்களின் போது சமூகமளிப்பதற்கும், இச்சட்டத்தின் கீழ் அந்நோக்கத்திற்கென செய்யப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அவர்களது பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவர்களுக்கு வங்கியின் நிதிகளிலிருந்து அத்தகைய ஊதியம் வழங்கப்படலாம்.

20. வங்கியானது 22 (1) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தொடக்க உதவுதொகைகள் செலுத்தப்படும்வரை தொழில் புரியத் தொடங்குதல் ஆகாது.

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவில் உள்ளதெதுவும், முன்னைய தேதியொன்றில் தொழில் புரியத் தொடங்குவதற்கு கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் வங்கிக்கு அதிகாரமளிப்பதினின்றும் அமைச்சரைத் தடைசெய்வதாகக் கருதப்படல் அல்லது பொருள்கொள்ளப்படல் ஆகாது.

## பாகம் II

## நிதி

21. வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனமானது இருநூறு கோடி ரூபாவாதல் வேண்டும். இது, ஒவ்வொன்றும் நூறு ரூபாப் பெறுமதிகொண்ட இரண்டு கோடிப் பங்குகளாகப் பிரிக்கப்படல் வேண்டும்

22. (1) நியமித்த தேதியின் பின்னர் ஓராண்டு காலத்தினுள் பின் வருபவர்கள் அறுபது கோடி ரூபாவிலான தொடக்க உதவுதொகையொன்றை இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய தொகைகளிலும் அத்தகைய முறையிலும் வங்கியின் மூலதனத்திற்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அவர்கள் அத்தகைய உதவுதொகைகளின் பயனாக அவ்வங்கியின் பங்குதாரர்களாகக் கருதப்படுதலும் வேண்டும்:—

(அ) இலங்கை அரசாங்கம் — காசாக நாற்பது கோடி ரூபா;

(ஆ) இலங்கை மத்தியவங்கி — காசாக இரண்டு கோடி ஐம்பது இலட்சம் ரூபாவும் கோரப்பட்டவுடன் செலுத்தற்பாலதான வாக்குறுதிப் பத்திரமாக ஏழு கோடி ஐம்பது இலட்சம் ரூபாவும்:

(இ) இலங்கை வங்கி — காசாக ஒரு கோடி இருபத்தைந்து இலட்சம் ரூபாவும் கோரப்பட்டவுடன் செலுத்தற்பாலதான வாக்குறுதிப் பத்திரமாக மூன்று கோடியே எழுபத்தைந்து இலட்சம் ரூபாவும்;

(ஈ) மக்கள் வங்கி — காசாக ஒரு கோடி இருபத்தைந்து இலட்சம் ரூபாவும், கோரப்பட்டவுடன் செலுத்தற்பாலதான வாக்குறுதிப் பத்திரமாக மூன்று கோடி எழுபத்தைந்து இலட்சம் ரூபாவும்.

(2) வங்கியானது தொழில் தொடங்கியதன் பின்னர் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் அல்லது நேரங்களிலும், அத்தகைய தொகையில் அல்லது தொகைகளிலும் அத்தகைய முறையிலும் 21 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பங்குகளை ஒப்பப் பணத்தொகைகளுக்கெனப் பொதுமக்களுக்குக் கொடைமுனைதல் வேண்டும். அத்துடன் அத்தகைய பங்குகளைக் குறித்தொதுக்குதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் சபையானது, காலத்திற்குக் காலம் எவரேனும் பங்குதாரர்களிடமிருந்து அல்லது எல்லாப் பங்குதாரர்களிடமிருந்தும் வங்கியின் மூலதனத்திற்கான மேலதிக உதவுதொகைகளைப் பரிந்து கோரி ஏற்றுக் கொள்ளலாம்.

(4) வங்கியின் மூலதனத்திற்கான உதவுதொகை எதுவும், இப்பிரிவின் அல்லது 57 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றியல்லாது செய்யப்படல் அல்லது ஏற்றுக்கொள்ளப்படல் ஆகாது.

23. எவரேனும் பங்குதாரரின் பொறுப்பானது, அவரது பங்குகளின் மீது செலுத்தப்படாதுள்ள தொகை எதுவுமிருப்பின் அதுவரை, வரையறுக்கப் படல் வேண்டும்.

24. இச்சட்டத்தின் இப்பாகத்தின் பின்வரும் ஏற்பாடுகளின் கீழும், அவற்றிற்கிணங்கவும், வங்கியானது, அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும், தத்துவங்களை பிரயோகிப்பதற்கும், கடமைகளை புரிவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடன் என்ற வகையாக அல்லது வேறு வகையாக இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே திரட்டலாம்

25. வங்கியானது காலத்திற்குக்காலம் அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கலாம் என்பதுடன், அரசாங்கமானது, காலத்திற்குக்காலம், இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து ஏதேனும் பணத்தொகையை அரசாங்கத்தால் தீர் மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமைய ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிகளுக்கு வங்கிக்குக் கடனாக வழங்கவும் செய்யலாம்.

26. (1) வங்கியானது. காலத்திற்குக்காலம், மத்தியவங்கியிடமிருந் எவையேனும் பணத்தொகைகளை, பணச்சபையினால் தீர்மானிக்கப்படக் கூடிய வாறான அப்பணத்தொகை மீதான வட்டி பற்றியதும் அதனை மீளச் செலுத்துதல் பற்றியதுமான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமைய கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

(2) வங்கியினல் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பெறப்படும் கடன்கள், எந்த நேரத்திலும், செலுத்தப்பட்ட மூலதனத்தில் பத்து சதவீதத்திற்குச் சமமான வொரு தொகையையும் வங்கியின் வரிக் கட்டுப்பாடற்ற ஒதுக்குகளுக்கமைய கடனுகப் பெற்றுக்கொள்ளலாம்.

27. வங்கியானது, காலத்திற்குக் காலம், பணச்சபையின் அங்கீகாரத் துடன், எதேனும் வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள எத்தகையனவுமான வேறு எவையேனும் மூலவளங்களிலிருந்து ஏதேனும் பணத்தொகையை, வங்கிக்கும் விடயத்திற்கேற்ப அத்தகைய அரசாங்கத்திற்கும் அல்லது அத்தகைய வேறு ஏதேனும் மூலவளத்திற்கும் இடையிலான உடன்படிக்கையின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாருன அப் பணத்தொகை மீதான வட்டிபற்றியதும் அதனை மீளச் செலுத்துதல் பற்றியது மான அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மீது கடனுகப் பெறலாம்.

28. (1) பணிப்பாளர் சபை கடனீட்டுப் பத்திரங்களையும், பங்குத் தொகுதியையும் உருவாக்கி வாங்கலாம். அவ்வாறு உருவாக்கி வழங்கப்படும் கடனீட்டுப் பத்திரங்களும் பங்குத் தொகுதியும், இச்சட்டத்தில் முறையே ''தேசிய அபிவிருத்தி வங்கிக் கடனீட்டுப் பத்திரங்கள்'' எனவும், ''தேசிய அபிவிருத்தி வங்கிப் பங்குத் தொகுதி'' எனவும் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) தேசிய அபிவிருத்தி வங்கிக் கடனீட்டுப் பத்திரங்களும் தேசிய அபி விருத்தி வங்கிப் பங்குத் தொகுதியும், பணிப்பாளர் சபையினல் தீர்மானிக்கப் படக்கூடியவாருன அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படுதலும், கைமாற்றப்படுதலும், கையாளப்படுதலும், மீட்கப்படுதலும், இல்லாதாக்கப் படுதலும் வேண்டும்.

29. (1) (அ) பணிப்பாளர் சபையினல் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்ட எவையேனும் தேசிய அபிவிருத்தி வங்கிக் கடனீட்டுப் பத்திரங்களின் மீதானதும், ஏதேனும் தேசிய அபிவிருத்தி வங்கிப் பங்குத் தொகுதி மீதானதுமான முதலைத் திருப்பிச் செலுத்துவதற்கும் வட்டியைச் செலுத்துவதற்கும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து அல்லது வேறேதேனும் மூல வளத்திலிருந்து வங்கியினல பெறப்பட்ட ஏதேனும் கடன் மீதான முதலைத் திருப்பிச் செலுத்துவதற்கும் வட்டியைச் செலுத்துவதற்கும்,

அரசாங்கம் உத்தரவாதமளிக்கலாம்

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் உத்தர வாதத்தை நிறைவு செய்வதற்குத் தேவையான பணத்தொகை எதுவும், இலங் கைத் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்படல் வேண்டும்.

30. (1) ஏதேனும் சருவதேச அல்லது பிராந்தியக் கடன் வழங்கு நிறுவனத் திடமிருந்து, அல்லது அரசாங்கத்தினல் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் சருவ தேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பிடமிருந்து, வங்கியினல் பெறப்படும் ஏதேனும் கடனுக்கு, அரசாங்கம் தாம் தீர்மானிக்கக்கூடியவாருன அத்தகைய

நியதி, நிபந்தனைகளின் மீது உத்தரவாதமளிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது. இவ்வுட்பிரிவின் கீழ் உத்தரவாதமளிக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் கடன் வெளிநாட்டு நாணயத்தில் பெயர் குறித்து விவரிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதத்தின் கீழ் அரசாங்கத்தினால் செலுத்தற்பாலனவான எல்லாப் பணத்தொகைகளும், திரட்டு நிதியத்தின் மீது இத்தால் பொறுப்பாக்கப்படுகின்றன.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதத்தின் கீழ், ஏதேனும் சருவதேச அல்லது பிராந்தியக் கடன் வழங்கு நிறுவனத்திடமிருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் சருவதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பிலுமிருந்து வங்கியினால் பெறப்படும் ஏதேனும் கடனின் முதல், வட்டி, வேறு விதிப்பனவுகள் என்பன தொடர்பில் வங்கியினால் செலுத்தப்படற்பாலனவான எல்லாப் பணத்தொகைகளும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது வேறு சட்டத்தினால் முரணாக எது எப்படியிருப்பினும்—

(அ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறு சட்டத்தினால் அல்லது அச்சட்டத்தின் கீழ் தற்போது விதிக்கப்படும் அல்லது இதன் பின்னர் விதிக்கப்படக்கூடிய எவையேனும் வரிகளுக்கான, தீர்வைகளுக்கான அல்லது கட்டணங்களுக்கான கழிவின்றியும், அத்தகைய வரிகள், தீர்வைகள் அல்லது கட்டணங்கள் இன்றியும், செலுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறு சட்டத்தினால் அல்லது அச்சட்டத்தின் கீழ் தற்போது விதிக்கப்படும் அல்லது இதன் பின்னர் விதிக்கப்படக்கூடிய மட்டுப்பாடுகள் யாவும் இன்றி, செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் முறி அல்லது வாக்குறுதிப் பத்திரம் இலங்கையில் வதியும் தனியாளொருவரினால் அல்லது கூட்டுத்தாபனமொன்றினால் பயன் தரும் வகையில் சொந்தமாக வைத்திருக்கப்படும் போது, அத்தகைய ஏதேனும் முறியின் அல்லது வாக்குறுதிப்பத்திரத்தின் கீழான கொடுப்பனவுகள் செய்யப்பட்டதும், அவற்றை வைத்திருப்பவருக்கு இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது. அத்தகைய முறியை அல்லது வாக்குறுதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் ஏதேனும் சருவதேச அல்லது பிராந்தியக் கடன் வழங்கு நிறுவனமாக அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் சருவதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பாக இருத்தல் ஆகாது.

(4) மூன்றும் உட்பிரிவின் நோக்கத்துக்காக, தனியாளொருவர் இலங்கையில் வதிகின்றாரா அல்லது கூட்டுத்தாபனம் ஒன்று இலங்கையில் வதிவு கொண்டுள்ளதா என்பது பற்றிய பிரச்சினை, 1963ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 54ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்கத் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(5) இச்சட்டத்தைப் பின்பற்றி, அரசாங்கத்திற்கும் ஏதேனும் சருவ தேச அல்லது பிராந்தியக் கடன் வழங்கு நிறுவனத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்படும், அல்லது அரசாங்கத்திற்கும் அரசாங்கத்தினுல் அங்கீகரிக்கப் பட்ட ஏதேனும் சருவதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பிற்குமிடையில் செய்துகொள்ளப்படும் உத்தரவாத உடன்படிக்கை ஒவ்வொன்றும், அத்துடன் அத்தகைய ஏதேனும் உத்தரவாத உடன்படிக்கையைப் பின்பற்றி அரசாங்கத் தால் அளிக்கப்படும் உத்தரவாதம் ஒவ்வொன்றும், ஏதேனும் இலங்கைச் சட்டத்தில் முரணுகை எது எவ்விதமிருப்பினும், முறையே அவ்வவற்றிலுள்ள நியதிகளுக்கிணங்கச் செல்லுபடியானவையும் வலியுறுத்தப்படற்பாலவையும் ஆதல் வேண்டும்.

(6) ஏதேனும் சருவதேச அல்லது பிராந்தியக் கடன் வழங்கு நிறுவனத் திடமிருந்து அல்லது அரசாங்கத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் சருவதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பிடமிருந்து வங்கியினுல் பெறப் படுவதும் அரசாங்கத்தினுல் உத்தரவாதமளிக்கப்படுவதுமான ஏதேனும் கடனின் விடயத்தில், அரசாங்கமானது, அக்கடன் முழுவதாக அல்லது பகுதி யளவில் எந்த நாணயத்தில் அல்லது எந்த நாணயங்களில் பெறப்பட்டுள்ள தோ அல்லது மீளச் செலுத்தப்படற்குரியதாகவுள்ளதோ அந்த நாணயம் அல்லது நாணயங்கள் தொடர்பில் இலங்கை ரூபாவின் விலைமதிப்பை மாற்று வதினின்றும் எழுகின்ற ஏதேனும் இலாபத்திற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

அத்தகைய நட்டத்தொகை ஒவ்வொன்றும் திரட்டுநிதியத்தின் மீது இத் தால் பொறுப்பாக்கப்படுகின்றது.

(7) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், ஏதேனும் சருவதேச அல்லது பிராந்தியக் கடன்வழங்கு நிறுவனத்திடமிருந்து அல்லது அரசாங்கத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் சருவதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பிடமிருந்து வங்கியினுல் பெறப்படும் ஏதேனும் கடன்தொடர்பில், வங்கியினுல் நிறைவேற்றப்படும் உடன்படிக்கை, முறி அல்லது வேறு ஆவணம் எதுவும், எத்தகைய முத்திரைத்தீர்வைக்கும் அல்லது முத்திரைத் தீர்வைகளுக்கும் அமைந்ததாதல் ஆகாது என்பதுடன், அதன்மீது முத்திரைத்தீர்வை அல்லது முத்திரைத்தீர்வைகள் விதிக்கப்படலும் ஆகாது.

31. (1) ''நிருவகிக்கப்படும் மூலவளங்கள் நிதியம்'' என அறியப்படும் நிதியமொன்றை வங்கி தாபித்தல் வேண்டும். அது இச்சட்டத்தில் ''நிதியம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும். இந்நிதியம் வங்கியின் பொது நிதியங்களின் பாகமாக அமைதல் ஆகாது என்பதுடன், சிறப்பு நிதியமொன்ருக இருத்தலும் வேண்டும். அத்துடன் அது அரசாங்கத்திற்காகவும் அல்லது அரசாங்கத்தினுல் அங்கீகரிக்கப்படக்கூடியவாருன அத்தகைய ஏதேனும் வெளிநாட்டு அரசாங் கத்திற்காகவும் வெளிநாட்டு அல்லது சருவதேச ஒழுங்கமைப்பிற்காகவும் அல்லது ஆளுக்காகவும் அல்லது ஆட்களுக்காகவும் அல்லது அவற்றின் அல்லது அவர்களின் சார்பிலும் வங்கியினுல் அதன் பொது நிதியங்களினின்றும் தனி வேருக நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) நிதியத்தின் நோக்கங்களாவன, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழும் அவற்றிற்கிணங்கவும், கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில்முயற் சிகளுக்கும், நிதியத்திலிருந்து கடன்கள், முற்பணங்கள் அல்லது வேறு கடனுதவி

அல்லது வழங்கல்கள் செய்யப்படுவதனை அல்லது அளிக்கப்படுவதனை இயலச் செய்தலேயாகும்.

(3) நன்கொடையளிப்பவருக்கும் வங்கிக்கும் இடையில் செய்துகொள்ளப் படும் ஏதேனும் உடன்படிக்கையின் நியதிகளின்படி, வங்கியானது, ஏதேனும் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கு அல்லது வேறு தொழில்முயற்சிக்கு ஏதேனும் கடனை. முற்பணத்தை, வழங்கலை அல்லது வேறு கடனுதவியைக் கொடுப்பதற்கு அல்லது அளிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(4) நிதியத்தின் நோக்கங்களுக்காக, அரசாங்கத்தினாலும் ஏதேனும் வெளி நாட்டு அரசாங்கத்தினாலும் வேறு ஏதேனும் மூலவளத்தினாலும் (அது இலங் கையில் இருப்பினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே இருப்பினுஞ்சரி) கொடுக்கப்படும் எல்லா நன்கொடைத் தொகைகளும் வழங்கல் தொகை களும் வங்கியினால் நிதியத்தின் வரவில் இடப்படல் வேண்டும். அத்துடன் சேர்த்து, நிநியத்தின் தொழிற்பாடுகளிலிருந்து எழும் தேறிய வருமானமும் அல்லது வட்டியும் நிதியத்தின் வரவில் இடப்படல்வேண்டும்.

(5) நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் குறிக்கோளுடன் வங்கி யினால் புரியப்படும் ஏதேனும் செலவினின்றும் அல்லது காரியத்தினின்றும் எழும் அல்லது அது தொடர்பில் உறப்படும் வங்கியின் எல்லா நிதிசார் பொறுப் புடைமைகளும் அல்லது பொறுப்புக்களும் நிநியத்தின்மீது பொறுப்பாக்கப் படுதல் வேண்டும்

(6) நிதியத்தின் குறிக்கோள்களைப் பின்பற்றி உடனடியாகப் பயன்படுத் தப்படமுடியாதிருக்கும் அந்நிதியத்தின் மேலதிக மூலவளங்களை, பணிப்பாளர் சபையானது, நிதியத்தின் நீண்டகால அக்கறைகளுக்குப் பங்கமின்றி, அது தோதானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்புக்களில் தற்காலிகமாக முதலீடுசெய்யலாம்.

(7) இச்சட்டத்தின் கீழ் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எந்தக் கருமம் தொடர்பிலும் விதிகள் ஆக்கப்படலாம்:—

(அ) நிதியத்தின் கணக்குகள் வைத்திருக்கப்படவேண்டிய முறை;

(ஆ) அறவிடப்படமுடியாத கடன்களுக்கும் நிச்சயமில்லாத கடன் களுக்கும், சொத்துக்களின் தேய்மானத்திற்கும், வழமையான வங்கித்தொழில் நடைமுறைக்கிணங்க ஏற்படும் அத்தகைய எதிர் பாராச் செலவுகளுக்கும் என நிதியத்தில் ஒதுக்குகளைத் தாபித்தல்;

(இ) நிதியத்தை முடிவுறுத்தல் அல்லது ஒழித்துக்கட்டுதல்; அத்துடன்

(ஈ) மேற்கூறப்பட்ட எவையேனும் விடயங்களுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறு எல்லாக் கருமங்களும்.

(8) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், வங்கியானது, நிதியத்தின் இலாபங்கள், வருமானம் என்பவற்றின் மீது வரு மானவரி செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்படல் வேண்டும்.

32. (1) வங்கியினால் அல்லது பணிப்பாளர் சபையினால்—

(அ) வங்கியின் மூலதனத்திற்கான உதவுதொகைகளாகப் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) வங்கியின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் பெறப்படும் எல்லாம் பணத்தொகைகளும்;

(இ) வங்கியின் அல்லது அத்தகைய சபையின் தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஈ) வங்கித்தொழிலையும் அதன் நிருவாகத்தையும் நடாத்துவதில் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும்,

வங்கி நிதிகளின் வரவில் வைக்கப்படல் வேண்டும்.

(2) (அ) வங்கியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதினின்று எழும் அல்லது அது தொடர்பில் உறப்படும்;

(ஆ) வங்கியின் அல்லது அத்தகைய சபையின் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதினின்றும் புரிவதினின்றும் எழும் அல்லது அவை தொடர்பில் உறப்படும்; அத்துடன்

(இ) வங்கியின் தொழிலையும் அதன் நிருவாகத்தையும் நடாத்துவதினின்றும் எழும் அல்லது அது தொடர்பில் உறப்படும்,

வங்கியின் அல்லது பணிப்பாளர் சபையின் எல்லா நிதிசார் பொறுப்புடைமைகளும் அல்லது பொறுப்புக்களும் வங்கியின் நிதிகள்மீது பொறுப்பாக்கப்படல் வேண்டும்.

33. வங்கியின் இலாபங்கள் பின்வரும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படல் வேண்டும்:—

(அ) பொது ஒதுக்கு நிதியம் ஒன்றைத் தாபித்துப் பேணிவருதல்;

(ஆ) அறவிடமுடியாத அல்லது நிச்சயமில்லாத கடன்களுக்குச் சிறப்பு ஒதுக்கு நிதியமொன்றைத் தாபித்துப் பேணிவருதல்;

(இ) குறிப்பிட்ட நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு ஒதுக்கு நிதியங்களைத் தாபித்துப் பேணிவருதல்; அத்துடன்

(ஈ) பங்கிலாபங்களைச் செலுத்துதல்.

34. வங்கியானது தொழில் புரியத்தொடங்கிய தேதிக்குப் பின்னர் வரும் பத்து ஆண்டுகாலப் பகுதியொன்றுக்கு அதன் இலாபங்கள், வருமானம் ஆகியவற்றின் மீது வருமான வரி செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

35. (1) (அ) வங்கியினால் ஏதேனும் கடன், முற்பணம் அல்லது வேறு கடனுதவி வழங்கப்பட்டுள்ளவரான, அல்லது

(ஆ) வங்கியினுல் ஏதேனும் கடன், முற்பணம் அல்லது வேறு கடனுதவி வழங்கப்பட்டுள்ளவரான ஆளின் மரணச் சொத்துக்கு மரணசாதன அதிகாரப்பத்திரத்தினை அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரங்களைப் பெற்றுள்ளவரான, அல்லது பணிப்பாளர் சபையினுல் அதன் சார்பாகச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது அவ்வாறு இறந்துபோன கடனுளியின் மரணச்சொத்தின் பிரதிநிதியாக இருப்பதற்கு நீதிமன்றத்தினுல் நியமிக்கப்பட்டிருக்கின்றவரான, அல்லது

(இ) ஏதேனும் கடனுக்கு, முற்பணத்திற்கு அல்லது வேறு கடனுதவிக்குப் பிணைப்பொறுப்பாக வங்கியிடம் ஈடுவைக்கப்பட்டுள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் எத்தகையதுமான ஏதேனும் உரிமை, உரித்து அல்லது அக்கறை, தாமாகவே உரித்துமாற்றுவதன் மூலம் அல்லது சட்ட நடைமுறை காரணமாக வந்துற்றவரான,

ஆள் ஒவ்வொருவரும், அவருக்குரிய அறிவித்தல்கள் யாவும் எம்முகவரியிட்டனுப்பப்படலாமோ அம்முகவரியொன்றை வங்கியில் பதிவுசெய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவு ஏற்புடையதாகும் எவரேனும் ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் அறிவித்தல், அத்தகைய ஆளுக்கு முகவரியிடப்பட்டு, அவ்வுட்பிரிவின் கீழ் அவரால் பதிவு செய்யப்பட்ட முகவரிக்குப் பதிவுக்கடிதமொன்றில் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டிருப்பின் அது முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டிருக்கின்றதெனக் கருதப்படல் வேண்டும்; அத்துடன் சாதாரண அஞ்சலில் அக்கடிதம் எந்நேரத்தில் ஒப்படைக்கப்படுமோ அந்நேரத்தில் அவ்வறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

ஆயினும், அத்தகைய எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தமது முகவரியைப் பதிவு செய்யத் தவறியுள்ளவிடத்து, வங்கியானது, அவரை விளித்து எழுதப்பட்ட அறிவித்தலொன்றை கசெற்றிலும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஆகக்குறைந்தது மூன்று தினசரிச் செய்தித்தாள்களிலேனும் வெளியிடுதல் வெண்டும். அத்தகைய அறிவித்தல் கடைசியாக எந்நாளன்று வெளியிடப்பட்டதோ அந்நாளன்று அவருக்கு அதுமுறையாகச் சேர்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

36. ஏதேனும் கடன், முற்பணம் அல்லது வேறு கடனுதவி பின்வரும் பிணைப்பொறுப்பின் மீது வங்கியினுல் வழங்கப்படலாம்:—

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் ஈடுவைத்தல்;

(ஆ) தேசிய அபிவிருத்தி வங்கிக் கடனீட்டுப்பத்திரங்களும், தேசிய அபிவிருத்தி வங்கிக் கையிருப்பும் வேறு எவையேனும் கையிருப்புக்கள், முறிகள், கடனீட்டுப் பத்திரங்கள், பங்குகள், ஈடுகளைச் சாட்டுதல் செய்தல் அல்லது வேறு பிணைப்பொறுப்புக்கள்;

(இ) எவையேனும் குதப் பற்றுச்சீட்டுக்கள், ஏற்று பொருட்பட்டியல்கள் அல்லது அத்தகைய பிணைப்பொறுப்பின் நோக்கத்துக்கெனப் பணிப் பாளர் சபையில் காலத்திற்குக் காலம் அங்கீகரிக்கப்படக்கூடியவா றுன அத்தகைய வேறு சாதனங்கள்;

(ஈ) எவையேனும் பண்டங்கள், விற்பனைப்பொருட்கள் அல்லது வணிகப் பொருட்கள்; அல்லது.

(உ) ஏதேனும் தொழில் முயற்சியினுல் அல்லது எவரேனும் தனியாளினுல் அளிக்கப்பட்டதும் பணிப்பாளர் சபையினுல் ஏற்றுகொள்ளப்பட் டதுமான ஏதேனும் உத்தரவாதம்.

37. ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை ஈடுவைப்பதன் மீது வங்கியினுல் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் கடன் தொகையை, முற்பணத் தொகையை அல் லது வேறு கடனுதவித்தொகையை மீளச்செலுத்துவதில் தவணைப் பணமொன் ருகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையை, அல்லது அக் கடனின், முற்பணத்தின், அல்லது கடனுதவியின் மீதான வட்டியாகச் செலுத் தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையைக் கொடுப்பனவு செய்வதில் தவறுகை புரியப்படுமிடத்து, அத்தவறுகையானது, அக்கடனில் முற்பணத் தில், அல்லது வேறு கடனுதவியில் வங்கிக்கு மீளச்செலுத்தப்படாதிருக்கும் அத்தகைய பாகம் முழுவதும் தொடர்பில் புரியப்பட்டிருப்பதாகக் கருதப் படல் வேண்டும்.

38. (1) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், ஏதேனும் கடனின் செலுத்தப் படாதிருக்கும் பாகம் முழுவதும் தொடர்பிலும் அதன் மீது செல்மதியான வட்டி தொடர்ப்பிலும் தவறுகை புரியப்பட்டுள்ள விடத்து அல்லது புரியப் பட்டுள்ளதாகக் கருதப்படுமிடத்து, பணிப்பாளர் சபையானது, அதன் தற்றுணி பின்படி 39 ஆம் பிரிவில் அல்லது 41 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள வாறு நடவடிக்கை எடுக்கலாம்;

ஆயின், சபையானது, ஏதேனும் விடயத்தில் 39 ஆம் பிரிவுக்கிணங்க நட வடிக்கை எடுத்துள்ளவிடத்து அல்லது நடவடிக்கை எடுக்கத்தொடங்கியுள்ள விடத்து, சபையானது அங்ஙனம் செய்வது அவசியமானது அல்லது புத்திசாலித் தனமானது எனக் கருதினுல், 41 ஆம் பிரிவின் கீழான தீர்மானத்தின் மூலம் அவ்விடயத்தில் அதன் பின்னர் நடவடிக்கை எடுப்பதினின்றும் சபையினை எதுவும் எந்தநேரத்திலும் தடுப்பதாகக் கருதப்படல் ஆகாது.

(2) இப்பிரிவினதும் 33 ஆம் பிரிவுரையிலான பிரிவுகளினதும் நோக்கங் களுக்காக 'கடன்' என்பது வங்கியினுல் வழங்கப்படும் ஒரு கடன் அல்லது ஒரு முற்பணம் அல்லது வேறு ஏதேனும் கடனுதவி எனப்பொருளாகும்

39 நாற்பத்திரண்டாம் பிரிவின ஏற்பாடுகளுக்கமைய, பணிப்பாளர் சபை யானது, எழுத்தில் பதியப்படவேண்டியதான தீர்மானத்தின் மூலம், எக்கடன் தொடர்பாகக் கொடுப்பனவில் தவறுகை புரியப்பட்டுள்ளதோ அக்கடனுக் குப் பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதான ஏதேனும் அசை வற்ற ஆதனத்தின் மீது நுழைந்து அத்தகைய ஆதனத்தை உடைமையிலெடுத்து முகாமை செய்வதற்கும் பேணுதற்கும், ஈடுவைத்தவர் தவறுகை புரிந்திருக்கா விட்டால் அத்தகைய ஆதனத்தைக் கட்டுப்படுத்துவதிலும் முகாமை செய்வ

திலும் அவரால் பிரயோகிக்கப்பட்டிருக்கக் கூடியவாறான அதே தத்துவங்களைப் பிரயோகித்தற்கும் அத் தீர்மானத்தில் குறிக்கப்படக்கூடியவாறான ஆள் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்.

40. (1) ஏதேனும் ஆதனம் தொடர்பாக 39 ஆம் பிரிவின் கீழான பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினல் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எவரும் அத் தீர்மானத்தின் நியதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும், குறிப்பாக—

(அ) அத்தகைய ஆதனத்தின் விளை பொருளை விற்கவும்;

(ஆ) அத்தகைய ஆதனத்திலிருந்து வரும் வாடகைகளை, இலாபங்களை அல்லது வேறு வருமானத்தைப் பெறவும்;

(இ) அத்தகைய ஆதனத்தைக் கட்டுப்படுத்துவதிலும் முகாமை செய்வதிலும் உறப்பட்ட செலவுகளை அத்தகைய ஆதனத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து கொடுக்கவும்;

(ஈ) அவரது சேவைகளுக்கான ஊதியமாக நிர்ணயிப்பது பொருத்தமெனச் சபை கருதக்கூடியவாறான பணத்தொகை (ஏதேனும் இருப்பின்) அதனை அத்தகைய வருமானத்திலிருந்து தமக்கென எடுத்துக் கொள்ளவும்;

(உ) அத்தகைய ஆதனத்தின் மீதான ஈட்டின் கீழ் வங்கிக்கு செல்மதியான எல்லாப் பணமும் முழுவதுமாகச் செலுத்தப்படும் வரையிலும், அல்லது அத்தகைய ஆதனத்தின் உடைமையை அளிக்குமாறு (2) ஆம் உட்பிரிவின் கீழ் அவர் சபையினல் பணிக்கப்படும் வரையிலும், அத்தகைய ஆதனத்தை உடைமையாகக் கொண்டிருக்கவும்,

பொதுவாக உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஏதேனும் ஆதனம் தொடர்பில், 39 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினல் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும்—

(அ) சபையானது அதன் தற்றுணிபின்படி நிர்ணயிக்கக் கூடியவாறான பணத்தொகை (ஏதேனும் இருப்பின்) அதனை, அத்தகைய ஆதனத்தின் வருமானத்திலிருந்து ஈடு வைத்தவருக்கு அவரின் பராமரிப்புக்கென மாதாந்தம் கொடுத்தல் வேண்டும்;

(ஆ) இதனகத்துமுன்னர் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்ட பின்னர் அத்தகைய ஆதனத்தின் வருமானத்தில் எஞ்சியிருக்கின்ற மீதிப் பணத்தைக் காலாண்டுக்கொருமுறை அல்லது சபையினல் வேறு விதமாகப் பணிக்கப்பட்டவாறாக, அத்தகைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்குச் சபை பணிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்தில் கொடுத்தல் வேண்டும்;

(இ) அத்தகைய ஆதனம் தொடர்பில் அவரால் பெறப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளைப் பற்றியனவான தெளிவானவையும் செம்மையானவையுமான பதிவேடுகளை வைத்திருத்தலும், சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில் அவற்றைச் சபைக்குக் கொடுத்தலும் வேண்டும்:

(ஈ) அத்தகைய ஆதனத்தின் உடைமையை ஈடு வைத்தவருக்கு அல்லது சபையினால் பணிக்கப்பட்டவாறான வேறெவரேனும் ஆளுக்கு அளித்தல் வேண்டுமென்பதுடன், இதனகத்துமுன்னர் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்ட பின்னர் அத்தகைய ஆதனத்தின் வருமானத்தில் எஞ்சியதாய் அவர் வசமிருக்கின்ற ஏதேனும் மீதியைச் சபைக்குச் செலுத்துதலும் வேண்டும்.

(6) சபையானது, ஈட்டின்கீழ் வங்கிக்குச் செல்மதியான எல்லாப் பணத்தொகைகளும் முழுமையாகச் செலுத்தப்பட்டிருக்கும்போது, ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தின் உடைமையை ஈடுவைத்தவருக்கு ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனத்தின் வருமானத்தில் எஞ்சியிருக்கின்ற ஏதேனும் மீதியை அவருக்குத் திருப்பிக்கொடுத்தலும் வேண்டும்.

41. நாற்பத்திரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, பணிப்பாளர் சபையானது, எந்தக் கடனைச் செலுத்துவதில் தவறுகை புரியப்பட்டுள்ளதோ, அந்தக் கடன் எதற்குமான பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தையும், அத்தகைய கடனின் செலுத்தப்படாதிருக்கும் பாகம் முழுவதையும், அவ்விற்பனைத் தேதிவரைக்கும் அதன்மீது செல்மதியான வட்டியையும், 48 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படவுள்ளதான பணத்துடன் செலவுகளுடனும் அறவிடும் முகமாகப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு எழுத்தில் பதியப்படவேண்டிய தீர்மானத்தின் மூலம், அத்தீர்மானத்தில் குறிக்கப்படும் ஆள் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்

42. (1) இரண்டாம் உட்பிரிவில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தவிர, கடன் பெற்றவர் இறந்திருக்கலாம் என்பது, அல்லது கடனுக்குப் பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனத்திலுள்ள எத்தன்மைத்தான உரிமை, உரித்து, அல்லது அக்கறை எதுவும் தாமாகவே உரித்து மாற்றுவதனால் அல்லது சட்ட நடைமுறையினால் வேறெவரேனும் ஆளுக்குச் சேர்ந்திருக்கலாம் என்பது எப்படியிருப்பினும், 39 ஆம், 41 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளானவை ஏதேனும் பணத்தைச் செலுத்தத் தவறிய விடயத்தில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) கடன்பெற்றவர் இறந்துள்ளாரென்பதுடன் அவரது மரணச் சொத்துக்கான மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரங்கள் ஆள் எவருக்கும் வழங்கப்பட்டிராதவிடத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்லது கடன் பெற்றவரினால் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனம் எம்மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அவ்விடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றம், அதற்கெனப் பணிப்பாளர் சபையினால் விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேலும் நீதிமன்றம் கட்டளையிடக்கூடியவாறான ஆட்கள் எவரும் இருப்பின் அவர்களுக்கு அத்தகைய விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னரும், அத்துடன் மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்குதல் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரங்கள் வழங்குதல் தகைவிலாது தாமதப்படும் சாத்தியமிருக்கிறது எனத் திருப்தியுறினும், இப்பிரிவின் நோக்கங்களுக்காகக் கடன் பெற்றவரின் மரணச் சொத்தின் பிரதிநிதியாக இருப்பதற்கென ஆளொருவரை நியமிக்கலாம்; அத்துடன் அத்தகைய கடன் பெற்றவரின் மரணச்சொத்தின் பிரதிநிதியாக இருப்ப

தற்கு இவ்வுட்பிரிவின் கீழ் ஆளொருவர் நியமிக்கப்பட்டாலொழியவும் நியமிக்கப்படும் வரையிலும், அத்தகைய கடன் பெற்றவரினால் பணம் செலுத்தத் தவறப்பட்ட விடயத்தில் 39 ஆம், 41 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது.

43. ஏதேனும் ஆதனத்தின் விற்பனைக்கு அதிகாரமளிப்பதற்கான 41 ஆம் பிரிவின் கீழான ஒவ்வொரு தீர்மானத்தையும் பற்றிய அறிவித்தல், கசெற்றிலும், சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில ஆகக்குறைந்தது மூன்று தினசரிச் செய்தித்தாள்களிலேனும் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிவித்தலின் பிரதிகள், கடன்பெற்றவர் உயிருடனிருப்பின் அவருக்கும், 35 ஆம் பிரிவின்கீழ் அவ்வாதனம் தொடர்பாகத் தமது முகவரியைப் பதிவு செய்துகொண்டுள்ள ஆள் ஒவ்வொருவருக்கும் அனுப்பிவைக்கப்படலும் வேண்டும்.

44 ஒவ்வொரு விற்பனையினதும் தேதி, நேரம், இடம் என்பன பற்றிய அறிவித்தல் விற்பனைக்கென நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பதினைந்து நாட்களுக்குக் குறையாத காலத்தினுள் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிவித்தலின் பிரதிகள்—

(அ) கடன் பெற்றவர் உயிருடனிருந்தால் அவருக்கும், எவ்வாளுக்கு ஏதேனும தீர்மானம்பற்றிய அறிவித்தல் அனுப்பிவைக்கப்படும்படி 43 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அவ்வாள் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்;

(ஆ) விற்கப்படவிருக்கும் ஆதனத்தின்மீது அல்லது அதற்கு அண்மையில் வெளிக்காட்டி வைக்கப்படலும் வேண்டும்; அத்துடன்

(இ) அவ்வாதனம் எந்தக் கச்சேரியின் அல்லது எந்தப் பல்வேறு மாவட்ட நீதிமன்றங்களின் அல்லது நீதிவான் நீதிமன்றங்களின் நியாயாதிக்க எல்லையினுள் அமைந்துள்ளதோ அவற்றின் சுவர்களில் ஒட்டப்படலும் வேண்டும.

45. (1) கடனின் செலுத்தப்படாத பாகமாகவுள்ள முழுத்தொகையும், ஈட்டின் நியதிகளுக்கிணங்க அதன்மீது செல்மதியகவுள்ள எல்லா வட்டியும், 48 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் அறவிடப் பாற்பாலவையான பணங்களும், செலவுத் தொகைகளும் எவையேனும் இருப்பின். அத்தொகைகளும் விற்பனைக்கென நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்பாக எந்நேரத்திலும் சபைக்குக் கொடுக்கப்பட்டால் அவ்வாதனம் விற்கப்படல் ஆகாது என்பதுடன், அவ்வாதனத்தின் விற்பனைக்கென 41 ஆம் பிரிவின் கீழான தீர்மானத்தைப் பின்பற்றி மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படலுமாகாது.

(2) எந்தத் தவணைப்பணம் அல்லது வேறு கொடுப்பனவு தொடர்பில் பணம் செலுத்தத் தவறப்பட்டுள்ளதோ அத்தவணைப் பணமும் அல்லது வேறு கொடுப்பனவும், அத்துடன் ஈட்டின் நியதிகளுக்கிணங்க அதன்மீது செல்மதியாகவுள்ள ஏதேனும் வட்டியும், 48 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் அறவிடப்படற்பாலனவையான பணங்களும் செலவுகளும் எவையேனும் இருப்பின், அத்தொகைகளும் விற்பனைக்கென நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் எந்நேரத்திலும் சபைக்குக் கொடுக்கப்பட்டால், அவ்வாதனம் விற்கப்படல் ஆகாதெனவும் அவ்வாதனத்தின் விற்பனைக்கென 41 ஆம் பிரிவின்கீழான தீர்மானத்தைப் பின்பற்றி மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படல் ஆகாதெனவும் சபையானது அதன் தற்றுணிபின்படி பணிக்கலாம்.

46. பணிப்பாளர் சபையானது ஒரு முதற்கூறு விலையை நிர்ணயிக்கலாம். வங்கி தவிர்ந்த வேறு ஆள் எவருக்கும் அந்த விலைக்குக் குறைவாக அவ்வாதனம் விற்கப்படல் ஆகாது.

47. ஒரே ஆதனத்தைப் பிணைப்பொறுப்பாகக் கொண்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கள் வங்கியினால் வழங்கப்பட்டிருப்பதுடன், அத்தகைய கடன்களில் ஏதேனும் ஒன்றின்மீது அல்லது அதற்கு மேற்பட்ட கடன்களின்மீது செல்மதியான ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதில் தவறுகை புரியப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில் மற்றைய கடன் தொடர்பில் அல்லது மற்றைய கடன்களில் எது தொடர்பிலும் பணம் செலுத்துவதில் தவறுகை புரியப்படாதிருந்தது என்பது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும். அத்துடன் பணிப் பாளர் சபையானது அத்தகைய ஏதேனும் விடயத்தில், விடயத்திற்கேற்ற வாறாக, இரண்டு கடன்களும் தொடர்பில் அல்லது எல்லாக் கடன்களும் தொடர்பில் வங்கிக்குச் செல்மதியான முழுத்தொகையையும் அறவிடுவதற் கான 41 ஆம் பிரிவின்கீழான தீர்மானத்தின் மூலம் அவ்வாதனத்தை விற் பதற்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

48. பணிப்பாளர் சபையானது, கடனாளியிடமிருந்து அல்லது அவரது சார்பில் செயலாற்றும் ஆள் எவரிடமிருந்தும் ஏதேனும் கடன்மீது செல்மதி யான தொகையுடன் சேர்த்து—

(அ) எந்த ஆளுக்குக் கடன் வழங்கப்பட்டதோ அந்த ஆளினால் நிறை வேற்றப்பட்ட ஈட்டுமுறியில் அடங்கிய உடன்பாடுகளுக்கு இணங்க, வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தின்மீது செய்யப்பட்ட ஏதே னும் காப்புறுதிப் பூட்கை தொடர்பான கட்டுப் பணங்களையும் வேறு விதிப்பனவுகளையும் செலுத்துவதிலும் அத்தகைய ஈட்டுமுறியில் அடங்கியுள்ள உடன்பாடுகளின்கீழ் வங்கியினால் உறப்படுதற்கு அதிகாரமளிக்கப்பட்டவையான வேறு எல்லாச் செலவுத்தொகை களையும் விதிப்பனவுகளையும் செலுத்துவதிலும், வங்கியினால் செல வழிக்கப்பட்ட எல்லாப் பணத்தையும்; அத்துடன்

(ஆ) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனையை விளம்பரப்படுத்தற்கும் அதனை விற்பதற்கும் ஆன செலவுத் தொகைகளையும்,

அறவிடலாம்;

ஆயினும் இப்பந்தியின்கீழ் உறப்பட்டனவான செலவுத்தொகைகள், சபை யின் தீர்மானத்தினால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான கட னின் அத்தகைய விகிதத்தை விஞ்சுதல் ஆகாது.

49. ஈடுவைக்கப்பட்ட ஆதனம் விற்கப்பட்டிருந்தால், பணிப்பாளர் சபை யானது, ஈட்டின்மீது செல்மதியான தொகையையும் 48 ஆம் பிரிவின்கீழ் அற விடப்படற்பாலதான பணத்தையும் செலவுத்தொகைகளையும் அவ்விற்பனை யினாற் பெறப்பட்ட வருவாயிலிருந்து கழித்த பின்னர் எஞ்சியுள்ள மீதி, ஏதே னும் இருப்பின், அதனைக் கடனாளிக்கு, அல்லது கடனாளிக்குச் செல்மதியான

கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளுதற்குச் சட்டப்படியாக உரித்துள்ளவரான ஆள் எவருக்கும், அல்லது எவருக்குப் பணம் செலுத்தப்படவேண்டும் என்பதை யிட்டு சபைக்கு ஐயப்பாடிருப்பின், ஈடு வைக்கப்பட்ட ஆதனம் எம்மாவட்டத் தில் அமைந்துள்ளதோ அவ்விடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

50. (1) ஈடு வைக்கப்பட்ட ஆதனம் விற்கப்பட்டிருந்தால், பொது முகா மையாளர், பணிப்பாளர் சபையின் குறிப்பிட்டவோர் அதிகாரமளிப்பின்மீது விற்பனைச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன், அதன்மேல் அத்தகைய ஆதனத்திற்கும் ஆதனத்திலும் கடனுளிக்குள்ள எல்லா உரிமையும் உரித்தும், அக்கறையும் கொள்வனவுகாரருக்கு உரித்தாதலும் வேண்டும்; அத் துடன் அதன்பின்னர், ஆதனம் வங்கியிடம் ஈடுவைக்கப்பட்ட தேதிக்குப் பின னர் செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பின்மூலம் அல்லது கையளிப்பின்கீழ் அவ்வாதனத்தில் எத்தகையதுமான உரிமையை, உரித்தை அல்லது அக்கறையைக் கோரும் ஆள் எவரும், எத்தகையதுமான கார ணம் எதற்காகவும் விற்பனையைச் செல்லுபடியற்றதாக்குவதற்கென அல்லது கொள்வனவுகாரருக்கு எதிராக அவ்வாதனத்தில் ஏதேனும் உரிமையை, உரித்தை அல்லது அக்கறையை நிலைநாட்டுவதற்கென ஏதேனும் நீதிமன்றத்தில் நட வடிக்கை எடுத்தல் அவருக்குத் தகுதிவாய்ந்ததாகாது.

(2) ஏதேனும் ஆதனத்தின் விற்பனை தொடர்பாக, அவ்வாதனத்தின் விற் பனை பற்றியனவான இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும் இணங்கி யொழுகப் பட்டுள்ளன என்பதற்குப் பொதுமுகாமையாளரினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கையொப்பமிட்ட சான்றிதழ் ஒன்றை முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(3) கொள்வனவுகாரர் வங்கி தவிர்ந்த வேறு எவரேனும் ஆளாக இருப்பின் அச்சான்றிதழானது பொருளளவில் இச்சட்டத்திற்கான அட்ட வணையிலுள்ள 'அ' என்னும் படிவத்தில் அமைதல் வேண்டும். அத்துடன், கொள்வனவுகாரர் வங்கியாகவிருப்பின், அச்சான்றிதழானது பொருளளவில் இச்சட்டத்திற்கான அட்டவணையில் உள்ள 'ஆ' என்னும் படிவத்தில் அமை தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு விற்பனைச் சான்றிதழும், அது அசைவற்ற ஆதனத்தின் உரிமைமாற்றம என்றுற் போன்று முத்திரைத் தீர்வைக்கும் விதிப்பனவும்களுக் கும் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட எவையனும் பதிவுக் கட்டணங்களுக் கும் வேறு விதிப்பனவுகளுக்கும் உட்பட்டதாதல் வேண்டும். இவை எல்லாம் கொள்வனவுகாரரால் செலுத்தப்படற்பாலனவையாதல் வேண்டும்.

51. (1) இச்சட்டத்தின் முறபோந்த ஏற்பாடுகளைப் பின் பற்றி விற்கப் பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்பவர், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு, அல்லது அவ்வாதனம் எவ்விடத்தில் அமைந்துள் ளதோ அவ்விடத்தின் மீது நியாயாதிக்கமுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்ததன் மேலும் 50 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அவ்வாதனத்தின் விற்பனைச் சான்றிதழைக் காண்பித்ததன் மேலும், அவ்வாதனத்தின் உடமையை ஒப்படைத்தற்கான கட்டளை யொன்றைப் பெறுவதற்கு உரித்துடையராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, சுருக்கமுறை நடவடிக்கை வகையாகச் செய்யப்பட்டு முடிவு செய்யப்படல் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பத்தின் நோக்கத்திற்காவும் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா ஆவணங்களின் மீதும், அத்தகைய விண்ணப்பம் எவ்வாதனம் பற்றியதோ அவ்வாதனத்தின் அதே விலை மதிப்பபையுடைய ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் உடைமையை ஒப்படைப்பதற்கான மாவட்ட நீதிமன்றமொன்றின் தீர்வையொன்றை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பங்களின் மீதும், அவற்றுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான நடவடிக்கைகளின் மீதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான முறையான அதே வீதங்களில் முத்திரைத் தீர்வைகளும் வேறு விதிப்பனவுகளும் செலுத்தப்படல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின் பற்றி விற்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம், கடனுளியின் அல்லது அவரின் சார்பில் வேறு எவரேனும் ஆளின் இருப்பாட்சியில் அல்லது வங்கிக்கு ஆதனம் ஈடுவைக்கப் பட்ட பின்னர் கடனுளியால் உருவாக்கப்பட்ட ஓர் உரித்தின் கீழ் உரிமை கோருகின்றவரான ஏவரேனும் ஆளின் இருப்பாட்சியில் உள்ளவிடத்து, மாவட்ட நீதிமன்றமானது, கொள்வனைகாரருக்கு, அல்லது அவரின் சார்பில் உடைமை பெறுதற்கென அவர் நியமிக்கக்கூடிய ஆள் எவருக்கும் அவ்வாதனத்தின் உடைமையை அளிப்பதன் மூலம் அவ்வாதனம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடுதல் ,வேண்டும்.

(4) இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம் ஒரு வாடகைக் குடியிருப்பாளரின் அல்லது அதில் இருப்பாட்சிகொள்ள உரித்துடையவரான வேறு ஆளின் இருப்பாட்சியில் உள்ளவிடத்து. மாவட்ட நீதிமன்றமானது, அவ்வாதனத்திலுள்ள துலாம்பரமான ஏதேனும் இடத்தில் விற்பனை நடந்து விட்டதென்ற ஓர் அறிவித்தலைச் சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒட்டுவதன் மூலமும் ஏதேனும் வசதியான இடத்தில் பறை தட்டுவதன் மூலமும் அல்லது வழமையான அத்தகைய வேறு முறையில் கடனுளியின் அக்கறை கொள்வனைகாரருக்குக் கைமாற்றப்பட்டிருக்கிறதென இருப்பாட்சி கொண்டவருக்குப் பிரகடனப்படுத்துவதன் மூலமும் அவ்வாதனம் ஒப்படைக்கப்படல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும். அத்தகைய பிரகடனத்துக்கான செலவு நீதிமன்றத்தினல் நிர்ணயிக்கப்படல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு விடயத்திலும் அது கொள்வனைகாரரினல் முற்பணமாகச் செலுத்தப்படலும் வேண்டும்,

(5) மூன்றும் உட்பிரிவின் கீழ் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், விடயத்திற்கேற்றவாறு, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 287 ஆம் அல்லது 288 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட உடைமை ஒப்படைத்தற்கான கட்டளையொன்றெனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அச்சட்டக்கோவையின் ஏதேனும் ஏற்பாட்டினை ஏற்புடையதாக்கும் நோக்கத்திற்காக, கடனுளியும் கொள்வனைகாரரும், முறையே தீர்ப்புக் கடனுளியாகவும் தீர்ப்புக் கடன் பெறுநராகவும் கருதப்பட்டவர்களாய், அக்கட்டளையானது அங்ஙனம் ஆக்கப்பட்ட கட்டளையொன்றென்றுற்போன்று அதே விதத்தில் வலியுறுத்தவும்படலாம்.

UNIVERSITY OF MORATUWA LIBRARY

52. விற்கப்பட்ட ஆதனம் வங்கியின் சார்பில் கொள்வனை செய்யப்பட்டுள்ளவிடத்து, அவ்வாதனம் எக்கடனுக்காக விற்கப்பட்டதோ அது தொடர்பாக செல்மதியான (அதனைக் கைப்பற்றுவதற்கும் விற்பதற்குமான செலவுத் தொகைகள் உட்பட்ட) தொகையையும் கூட்டு மொத்தத் தொகையின் மீது விதித்துரைக்கப்பட்ட வீதத்தை விஞ்சாத ஒரு வீதத்திலான வட்டியையும் கடனாளி அல்லது அவரது சார்பில் ஆள் எவரும் செலுத்துவதன் மேல், பணிப்பாளர் சபையானது, அவ்வாதனத்தை அது மீள விற்பதற்கு முன் எந்நேரத்திலும், விற்பனைச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றில் அப்பயன் பெறுமாறு பொதுமுகாமையாளர் புறக்குறிப்பொன்றை இடுவதன் மூலம் அவ்விற்பனையை இல்லாதாக்கலாம். அத்தகைய புறக்குறிப்பொன்று, காணிப் பதிவாளரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் மேல், இச்சட்டத்தின் கீழான விற்பனை ஒருபோதும் செய்யப்பட்டிருக்கவில்லை என்றாற்போன்று சொல்லப்பட்ட ஆதனத்தைக் கடனாளிக்கு மீளவும் உரித்தாக்கல் வேண்டும்.

53. அங்ஙனம் விற்கப்பட்ட ஆதனம் வங்கியின்சார்பில் கொள்வனை செய்யப்பட்டிருக்கின்றது என்பதுடன், 52 ஆம் பிரிவின் கீழ் அவ்விற்பனை இல்லாதாக்கப்படாதிருந்தால், பணிப்பாளர் சபையானது எந்நேரத்திலும் அவ்வாதனத்தை மீள விற்பனை செய்து, மூல விற்பனையில் கொள்வனைகாரரால் கொள்ளப்பட்டிருக்கக்கூடிய எல்லா உரிமையையும், உரித்தையும் அக்கறையையும் 50 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றில் பொதுமுகாமையாளரினால் புறக்குறிப்பு இடப்படுவதன் மூலம் கைமாற்றலாம். அப்புறக்குறிப்பானது, மூல விற்பனையில் சான்றிதழொன்றின் மீது கொள்வனைகாரர் செலுத்த வேண்டியிருந்த அதே முத்திரைத் தீர்வைக்கும் விதிப்பனவுகளுக்கும் உள்ளாதல் வேண்டும் என்பதுடன், அது காணிப்பதிவாளரின் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படும் போது அத்தகைய உரிமையையும், உரித்தையும், அக்கறையையும் மேற்சொல்லப்பட்ட வாறாகக் கொள்வனைகாரருக்கு உரித்தாக்கலும் வேண்டும்.

## பாகம் III

### கணக்காய்வும் கணக்குகளும்

54. வங்கியின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

55. (1) பணிப்பாளர் சபை தீர்மானிக்கக்கூடியவாறு பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத அத்தகைய இடைவேளைகளில் வங்கியின் கணக்குகளைக் கணக்காய்வாளர் தலைமையதிபதி கணக்காய்வு செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வங்கியின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்வதற்கென, அமைச்சர், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் தகைமைபெற்ற ஒரு கணக்காய்வாளரை அல்லது கணக்காய்வாளர்களை நியமிக்கலாம். அத்தகைய நியமனம் அமைச்சரால் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அவ்வங்கி தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமென அத்தகைய கணக்காய்வாளரின் அல்லது கணக்காய்வாளர்களின் சேவைகளைப் பயன்படுத்தத்தாம் உத்தேசித்துள்ளாரென அத்தகைய கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்கு எழுத்தில் கணக்காய்வாளர்

தலைமையதிபதி அறிவிக்கலாம். அதன்மேல் அத்தகைய கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்கள், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயலாற்றுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒவ்வொருவரும், தமது அறிக்கையை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அதன் பிரதியொன்றைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி, வங்கியின் கணக்குகளைப் பரிசிலனை செய்து ஐந்தொகையின் செம்மை பற்றித் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், பின்வருவன பற்றிப். பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்தலும் வேண்டும்:—

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி தேவைப்படுத்திய எல்லாத் தகவலையும் விளக்கங்களையும் அவர் பெற்றுள்ளாரா அல்லரா என்றும்; அத்துடன்

(ஆ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி, அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஐந்தொகையானது, அவர்களுக்கு எட்டிய தகவலுக்கும் விளக்கங்களுக்கும் இணங்கவும் வங்கியின் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளவாறும் வங்கியின் அலுவல்கள் பற்றிய உண்மையானதும் செம்மையானதுமான பார்வையீடொன்றை வெளிக்காட்டும் வகையில் முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளதா என்றும்

(5) ஐந்தொகையின் செம்மை பற்றித் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, கணக்காய்வாளர் தலைமையதிபதி பணிப்பாளர் சபையினதும் அமைச்சரினதும் சம்மதத்துடன், வங்கியின் ஏதேனும் கிளை தொடர்பில், அத்தகைய கிளையின் புத்தகங்களிலிருந்தும் கணக்குகளிலிருந்தும் எடுக்கப்பட்டு வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றவையும், பணிப்பாளர் சபையினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட வங்கியின் அலுவலர் ஒருவரினால் சரியானதென அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றவையுமான எவையேனும் பிரதிகளை அல்லது பொழிப்புக்களை ஏற்றுக்கொள்ளலாம்.

(6) இப்பிரிவில் ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது—

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும்; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

56. (1) ஏதேனும் ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதி பதியின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் மேல், அவ்வாண்டு தொடர்பிலான பின்வரும் ஆவணங்கள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றைப் பணிப்பாளர் சபையானது அமைச்சருக்கும் எல்லாப் பங்குதாரர்களுக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்:—

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை;

(ஆ) ஐந்தொகை;

இ) இலாப, நட்டக்கணக்கு; அத்துடன்

(ஈ) வங்கி வேலையின் கணக்கொன்றைத் தரும் பணிப்பாளர் சபைத் தவிசாளரின் அறிக்கை.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் தமக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளைப் பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப் பித்தல் வேண்டும்.

## பாகம் IV

### வங்கியின் பொறுப்புமுயற்சியில் பங்குபற்றுவதற்கான உடன்படிக்கை

57. (1) ஏதேனும் சருவதேச அல்லது பிராந்திய நிதி நிறுவனம் வங்கி யின் தொழிலில் பங்குபற்றுவதற்கென, அத்தகைய நிறுவனத்துடன் பணிப் பாளர் சபையானது உடன்படிக்கையொன்றைச் செய்து முடிப்பதற்கு இத் தால் அதிகாரமளிக்கப்படுகின்றது; அத்தகைய உடன்படிக்கை செய்துமுடிக்கப் பட்டுள்ளவிடத்து, அத்தகைய நிறுவனமானது, இச்சட்டத்தின் நோக்கங் களுக்காக, அவ்வுடன்படிக்கையில் அதன் சார்பாகக் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து பங்குபற்றுநர் ஒருவராக வருதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் உடன் படிக்கை, இச்சட்டத்தின் மூலம் அதன்கண் உள்ளடக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளு டன் சேர்த்து, பணிப்பாளர் சபை அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய உடன்பாடுகளையும் நிபந்தனைகளையும் உள்ளடக்கலாம்

(3) இச்சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பங்குபற்றுநர் ஒருவரால் பிரயோகிக்கப்படற்பாலனவான எல்லா உரிமை களும் அல்லது தத்துவங்களும், அந்தப் பங்குபற்றுநரின் சார்பாக, உடன் படிக்கையில் அதன் சார்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளினாலும் அல்லது ஆட்களினாலும் அத்தகைய முறையிலும் பிரயோகிக்கப் படலாம். அத்துடன் அவ்வாறு பிரயோகிக்கப்படின், அத்தகைய உரிமைகள் அல்லது தத்துவங்கள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பங்குபற்றுநரினால் முறையாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படலும் வேண்டும்.

58. ஐம்பத்தொன்பதிலிருந்து 63 வரையிலான பிரிவுகளின் (அவை யிரண்டுமுட்பட) ஏற்பாடுகள், ஒரு பங்குபற்றுநரேனும் இருக்கும்வரை மட்டுமே ஏற்புடையனவாதல் வேண்டும்.

59. (1) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பங்குபற்றுநர் ஒருவர், அவர் திறத்தவர் ஒருவராக இருப்பதும், 57 (1) ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதுமான உடன்படிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தொகையை, அல்லது அத்தொகை அங்ஙனம் குறித்துரைக்கப்படாதிருப்பின், பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தொகையை, வங்கியின் மூலதனத்திற்குத் தொடக்க உதவுதொகையாகச் செலுத்துதல் வேண்டும்.

(2) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய. மேலதிகத் தொகை எதுவும் பங்குதாரர்களினால் வங்கியின் மூலதனத்திற்கு உதவுதொகையாகச் செலுத்தப்படுமிடத்து, பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தொகையைப் பங்குபற்றுநர் ஒருவர் வங்கியின் மூலதனத்திற்கு மேலதிக உதவுதொகையாகச் செலுத்தலாம்.

(3) ஒராம், இரண்டாம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் பின்வரும் வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்தனவாதல் வேண்டும்; அதாவது—

(அ) ஒரேயொரு பங்குபற்றுநர் மட்டுமே இருக்குமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் கீழ் வங்கியின் மூலதனத்திற்கான அவரது தொடக்க உதவுதொகை, அல்லது (1)ஆம், (2)ஆம் உட்பிரிவுகளின் கீழான உதவுதொகைகளின் மொத்தத்தொகை, வங்கியின் அப்போதைக்கான மூலதனத்தின் நாற்பத்தொன்பது சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது; அல்லது

(ஆ) இரண்டோ, பலவோவாய பங்குபற்றுநர்கள் இருக்குமிடத்து, வங்கியின் மூலதனத்திற்கு (1)ஆம் உட்பிரிவின் கீழான அவர்களது தொடக்க உதவுதொகைகளின் மொத்தத்தொகை, அல்லது (1) ஆம், (2)ஆம் உட்பிரிவுகளின் கீழான அவர்களது உதவுதொகைகளின் மொத்தத்தொகை, வங்கியின் அப்போதைய மூலதனத்தின் நாற்பத்தொன்பது சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது.

60. (1) பங்குபற்றுநர் ஒருவர், வங்கியின் மூலதனத்திற்கு உதவுதொகை செலுத்துவதன் பயனாக வங்கியின் பங்குதாரர் ஒருவராகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க, வங்கியினால், பங்குபற்றுநருக்கு, ஒவ்வொன்றும் நூறு ரூபாப் பெயரளவிலான பெறுமதியுடைய பங்குச் சான்றிதழ்கள், பங்குபற்றுநரினால் செலுத்தப்பட்ட உதவுதொகைக்குச் சமமானவொரு தொகை வரை வழங்கப்படல் வேண்டும்.

(2) பங்குபற்றுநர் ஒருவரால் வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகளைக் கைமாற்றுவதற்கான அல்லது கையுதிர்ப்பதற்கான அவரது உரிமை. அதன் சார்பில் இச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கும், அவர் திறத்தவர் ஒருவராகவிருப்பதும், 57 (1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்டிருப்பதுமான உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும். அத்தகைய பங்குகள் எவையும் வேறு எவரேனும் ஆளுக்கு முறையாகக் கைமாற்றப்படின், அத்தகைய பங்குகள், எல்லா வகைகளிலும், அத்தகைய ஆள் பங்குபற்றுநர் என்றுற்போன்று அதே முறையிலும் அதே ஏற்பாடுகளுக்கு அமையவும் (அவ்வேற்பாடுகள் இச்சட்டத்தில் உள்ளடக்கப்

பட்டிருப்பினுஞ்சரி அல்லது உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினுஞ் சரி), அத்தகைய வேறு ஆவிஞல் வைத்திருக்கப்படல் வேண்டும்.

61. வங்கியில் பங்குதாரர்களிஞல் வைத்திருக்கப்படும் பங்குகள், வங்கி குலேக்கப்படும் சந்தருப்பத்தில் வங்கிச் சொத்துக்களின் விற்பனேயின் மூலம் பெறப்பட்ட தொகையினின்றும் வேறு ஆட்களுக்குக் கடன் பொறுப்புக்கள் எவையேனும் இருப்பின் அவற்றைச் செலுத்திய பின்னர், எஞ்சியிருக்கும் தொகையில் அவர்களால் வைத்திருக்கப்படும் பங்குகளின் பெயரளவிலான பெறுமதிக்கு இலங்க வீதப்படி பங்குபற்றுவதற்கு அவர்களே உரித்துடை யோராக்குதல் வேண்டும்.

62. (1) பணிப்பாளர் சபையின் எழுத்திலான முற்சம்மதத்துடன் அன்றியும், அந்நோக்கத்துக்கென அத்தகைய சபையிஞல் அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவருக்கு அல்லது அவருக்குச் சாதகமாக அன்றியும், வங்கியிலுள்ள பங்குகள் எவற்றையும் பங்குபற்றுநர் ஒருவர் விற்பதற்கு, சாட்டுதல் செய்வதற்கு, பொறுப்புச் சுமத்துவதற்கு அல்லது எத்தகையதுமான எம்முறையிலும் வேறு வகையாகப் பராதீனப்படுத்துவதற்கு அல்லது வில்லங்கத்துக்குள்ளாக்குவதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

(2) ஐம்பத்தேழாம் பிரிவின் கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ள உடன்படிக்கையில் திறத்தவர் ஒருவராகவிருக்கும் பங்குபற்றுநர் ஒருவரின் பங்குகளின் ஏதேனும் உத்தேச விற்பனேக்கு அல்லது பாராதீனப்படுத்துகைக்குப் பணிப்பாளர் சபை தனது சம்மதத்தை எச்சந்தருப்பங்களில் கொடுக்க மறுத்தல் ஆகாதோ அச் சந்தருப்பங்களேக் குறித்துரைக்கும் ஏற்பாட்டினே அத்தகைய உடன்படிக்கை எதுவும் உள்ளடக்கியிருப்பின், அத்தகைய ஏற்பாடு, அது இதனகத்துச் சட்டமாக்கப்பட்டாற்போன்று பயனுடையதாதல் வேண்டும்,

(3) வங்கியிலுள்ள பங்குபற்றுநர் ஒருவரின் பங்குகள் எவையும், பொது முகாமையாளரிஞல் பங்குபற்றுநருக்கு எழுத்தில் அளிக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் முற்சம்மதத்துடனன்றி ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டளே எதனேயும் அல்லது தீர்வை எதனேயும் நிறைவேற்றி வைப்பதில், அல்லது பங்குபற்றுநரின் கடனிறுக்கவகையற்றவராக இருக்கும் எவரேனும் சாட்டுதல் பெறுபவரால் விற்கப்படல் அல்லது விற்கப்படுவதற்கு உட்பட்டதால் ஆகாது, அல்லது பங்கு பற்றுநர் கம்பனி யொன்ருகவிருப்பின், அக்கம்பனியை ஒழித்துக் கட்டுவதற்கான எவையேனும் நடவடிக்கைகளின் போது எவரேனும் ஒழிப்போஞல் அல்லது வேறுவகையாக விற்கப்படுதல் அல்லது விற்கப்படுவதற்கு உட்பட்டதாதல் ஆகாது.

(4) ஓராம் உட்பிரிவிஞல் அல்லது (3)ஆம் உட்பிரிவிஞல் தேவைப்படுத்தப் பட்டவாறுன அத்தகைய முற்சம்மத்தைப் பெறுவதற்கெனப் பணிப்பாளர் சபைக்கு விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, சபையானது. அத்தகைய சம்மதத்தை அளிப்பதற்குப் பதிலாக, அவ்விண்ணப்பம் எப்பங்குகள் தொடர்பிலானதோ அப்பங்குகள் ஏனேய பங்குதாரர்களுள் எவரிஞலும் கொள்ளப் படுதல் வேண்டுமெனத் தீர்மானிக்கலாம்.

(5) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது வேறு சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் பயனுடையவாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய முற்போந்த ஏற்பாடுகளுக்கும் ஏதேனும்

எழுத்திலான சட்டத்தில் அல்லது வேறு சட்டத்தில் உள்ள எதற்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படுமிடத்து, அத்தகைய ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

63. பங்கு பற்றுநர் ஒருவரின் பங்குகள் அல்லது பங்குகளுள் எதுவும் 62 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான தீர்மானமொன்றைப் பின் பற்றிப் பங்குதாரர் ஒருவரால் கொள்ளப்படவுள்ளவிடத்து, அவ்வாறு கொள்ளப்படவுள்ள பங்குகளின் பெறுமதியானது, 57 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் அப்பங்கு பற்றுநர் திறத்தவர் ஒருவராக இருப்பதுமான உடன்படிக்கையில் அதன் சார்பாகக் கூறப்பட்டுள்ள அத்தகைய முறையிலும், அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீதும் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

64. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் பங்குதாரர் ஒருவரினால் கொள்ளப்பட்ட அல்லது கொள்வனை செய்யப்பட்ட பங்குபற்றுநர் ஒருவரின்; வங்கியிலுள்ள பங்குகளுக்கான அல்லது பங்குகளுள் எவற்றிற்குமான கொடுப்பனவு பங்குதாரரினால் செலுத்தப்படல் வேண்டும்.

65. பின்வரும் எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகள் வங்கிக்கு ஏற்புடையனவாதல் ஆகாது:-

(அ) பணம் கடன் கொடுத்தற் கட்டளைச் சட்டம்;

(ஆ) கடன் இணக்கச் கட்டளைச் சட்டம்; அத்துடன்

(இ) 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இணக்கச் சபைகள் சட்டம்.

66. பணச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, வங்கியானது கடன் வழங்கு நிறுவனமொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வங்கியானது, மத்திய வங்கியின் நடுத்தரகால, நீண்டகாலக் கடன நிதியத்திலிருந்து பணிப்பாளர் சபையானது காலத்திற்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனாகவும் பெறலாம்.

67. வங்கியின் எந்த வகுப்பினர்களான அலுவலர்களும், தமது கடமைகளை உரியமுறையிலும் பற்றுறுதியுடனும் புரிதற்கெனப் பணிப்பாளர் சபையின் திருப்திக்கேற்ப பிணைப்பொறுப்புக் கொடுத்தல் வேண்டுமென அத்தகைய சபையானது தீர்மானிக்கலாம். அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த வங்கியின் அலுவலர் ஒவ்வொருவரும் அங்ஙனம் பிணைப்பொறுப்புக் கொடுத்தல் வேண்டும்.

68. வங்கியின் பணிப்பாளர் அல்லது அலுவலர் எவரும், வங்கியினால் உறப்படும் சேதம் அல்லது இழப்பு எதற்கும், அத்தகைய சேதம் அல்லது இழப்பு அவரது கெட்ட நடத்தையினால் அல்லது வேண்டுமென்று செய்த தவறுகையினால் ஏற்பட்டிருந்தாலன்றி, பொறுப்புடையவராதல் ஆகாது.

69. வங்கியின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், கணக்காய்வாளரும், அலுவலரும், சேவையாளரும், முகவரும் கணக்காளரும் அல்லது வங்கியின் தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்ட வேறு ஆளும், தமது கடமைகளை மேற்கொள்ளுமுன்னர், வங்கியின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையிட்டும், அதன் வாடிக்கைக்காரர்களையிட்டும், எவரேனும் ஆளுடைய கணக்குகளின் நிலையையிட்டும், அவற்றுடன் தொடர்பான எல்லாக் கருமங்களையிட்டும் கண்

டிப்பான இரகசியத்தைப் பேணுவார் என்று வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன், தமது கடமைகளைப் புரியும் போது தமது அறிவுக்கு எட்டக்கூடியவான கருமங்கள் எவற்றையும்—

(அ) அங்ஙனம் செய்யுமாறு—

(i) பணிப்பாளர் சபையினுல், அல்லது

(ii) சட்ட நீதிமன்றமொன்றினுல், அல்லது

(iii) அத்தகைய கருமங்கள் எவ்வாளைப்பற்றினவோ அவ்வாளினுல் தேவைப்படுத்தப்பட்டாலன்றி;

(ஆ) தமது கடமைகளைப் புரியும்போதன்றி; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் எவற்றுடனும் இணங்கியொழுகுவதற்காகவன்றி,

வெளிவிடமாட்டாரென அத்தகைய வெளிப்படுத்துகையின் மூலம் வாக்குறுதியளித்தலும் வேண்டும்.

70. வங்கியின் ஒவ்வொரு பணிப்பாளரும், கணக்காய்வாளரும் முகாமையாளரும், செயலாளரும் அல்லது வேறு அலுவலரும், நீதிமன்றமொன்றினுல் அல்லது ஏதேனும் சட்டத்தினுல் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்பட்டால் அன்றி, எத்தன்மைத்தான எச்சந்தர்ப்பத்திலும் அவரை நோக்கிக் கேட்கப்படக்கூடியனவான வங்கியின் தொழில் சம்பந்தமான கேள்விகளுக்கான மறுமொழி, வங்கிபற்றிய அல்லது வங்கியின் எவரேனும் வாடிக்கைக்காரரினது தொழில் பற்றிய அல்லது அலுவல்கள்பற்றிய இரகசியங்களை வெளியிடும் அல்லது வெளிவிடக்கூடும் எனக் கருத்தினுல், அவர் அத்தகைய கேள்விகள் எவற்றுக்கும் மறுமொழிகூற மறுத்தல் வேண்டும்.

71. பொது முகாமையாளரால், அல்லது பற்றுச் சீட்டுக்கள் கொடுப்பதற்கென வங்கிப் பொது முகாமையாளரினுல் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எவராலும் கையொப்பமிடப்பட்ட ஒரு பற்றுக் சீட்டானது, வங்கிக்குச் செலுத்தப்பட்ட பணத்துக்கான பயனுள்ள பொறுப்பு விடுவிப்பொன்ருதல் வேண்டும்.

72. (1) வங்கியின் சார்பிலான ஒப்பந்தங்கள் பின்வருமாறு செய்யப்படலாம் :......

(அ) எந்தவோர் ஒப்பந்தம் தனிப்பட்ட ஆட்களுக்கிடையில் செய்யப்பட்டால் எழுத்திலிருக்க வேண்டுமெனச் சட்டத்தால் தேவைப்படுத்தப்படுமோ அந்த ஒப்பந்தம், வங்கியின் சார்பில், எழுத்தில், வங்கியின் பொது இலச்சினையின்கீழ் செய்யப்படலாம்.

(ஆ) எந்தவோர் ஒப்பந்தம் தனிப்பட்ட ஆட்களுக்கிடையில் செய்யப்பட்டால், அவ்வொப்பந்தத்திற்குப் பொறுப்பாகவுள்ள திறத்தவர்களால் கையொப்பமிடப்பட்டதாய் எழுத்திலிருக்க வேண்டுமெனச் சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகிறதோ அந்த ஒப்பந்தம், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாருக அதற்கென முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினுல் அல்லது ஆட்களினுல் கையொப்பமிடப்பட்டதாய், வங்கியின் சார்பில் எழுத்தில் செய்யப்படலாம்; அத்துடன்

(இ) எந்தவோர் ஒப்பந்தம் தனிப்பட்ட ஆட்களுக்கிடையில் செய்யப்பட்டால் எழுத்தில் அல்லது வாய்மொழி மூலம் மட்டுமே செய்யப்பட்டிருப்பினும் சட்டப்படி செல்லுபடியானதாயிருக்குமோ அந்த ஒப்பந்தம், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அதற்கென முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் அல்லது ஆட்களினால், வங்கியின் சார்பில் செய்யப்படலாம்.

(2) இப்பிரிவிற்கிணங்க செய்யப்பட்டவோர் ஒப்பந்தம் சட்டப்படி பயனுடையதாதல் வேண்டும் என்பதுடன், அது வங்கியையும் அதற்கான ஏனைய எல்லாத் திறத்தவர்களையும் அவர்களின் சட்டபூர்வமான பிரதிநிதிகளையும் பிணித்தலும் வேண்டும்.

(3) இப்பிரிவிற்கிணங்க செய்யப்பட்டவோர் ஒப்பந்தம், அது எவ்விதத்தில் செய்யப்படுதற்கு இப்பிரிவினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அதே விதத்தில் வேறுபடுத்தப்படலாம் அல்லது பொறுப்புவிடுவிக்கப்படலாம்.

73. நாணயமாற்றுண்டியல் அல்லது வாக்குறுதிப்பத்திரம், வங்கியின் பெயரால், அல்லது வங்கியால் அதன் சார்பில் அல்லது அதன் பொருட்டு இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அதற்கென முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் செய்யப்பட்டிருந்தால், நிறைவேற்றப்பட்டிருந்தால் அல்லது புறக்குறிப்பிடப்பட்டிருந்தால், அது வங்கியின் சார்பில் செய்யப்பட்டதாக, நிறைவேற்றப்பட்டதாக, அல்லது புறக்குறிப்பிடப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

74. பொது முகாமையாளரும், பணிப்பாளர் சபையினால் அதற்கென வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டவர்களும் அங்ஙனம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகார எல்லைகளினுள் செயலாற்றுபவர்களுமான ஆட்கள் தவிர்ந்த வேறு ஆள் எவரும், வங்கியின் பெயரால் அல்லது அதன் சார்பில் பணம் செலுத்துவதற்கென ஏதேனும் வாக்குறுதிப் பத்திரத்தை, நாணயமாற்றுண்டியலை, காசோலையை அல்லது கட்டளையை ஆக்குவதற்கு, வரைதற்கு, ஏற்றுக்கொள்வதற்கு அல்லது அதில் புறக்குறிப்பிடுதற்கு, அல்லது அவ்வொப்பந்தத்தின் மூலம் வங்கியின்மீது ஏதேனும் பொறுப்பினைச் சுமத்துவதற்கென அல்லது வேறு விதத்தில் வங்கியின் நாணயத்தை அடகுவைத்தற்கென ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்தற்கு அதிகாரமெதுவும் உடையவராதல் ஆகாது;

75. (1) வங்கியானது அதன் பொது இலச்சினையின் கீழான எழுத்தின் மூலம், இலங்கைக்கு வெளியேயுள்ள எவ்விடத்திலும் அதன் சார்பில் உறுதிகளை எழுதி நிறைவேற்றுதற்கான அதன் அற்றோணித் தத்துவக்காரராக எவரேனும் ஆளுக்குப் பொதுவாக அல்லது ஏதேனும் குறித்த கருமம் தொடர்பில் தத்துவமளிக்கலாம்.

(2) அத்தகைய அற்றோணித் தத்துவகாரரால் வங்கியின் சார்பிலும் தமது கையொப்பத்தின் அல்லது இலச்சினையின்கீழும் கையொப்பமிடப்பட்ட ஓர் உறுதியானது, வங்கியைப் பிணித்தல் வேண்டும் என்பதுடன், அது அதன் பொது இலச்சினையின் கீழென்றாற்போன்று அதே பயனையுடையதாதலும் வேண்டும்.

76. பணிப்பாளர் சபையானது, பின்வரும் கருமங்கள் தொடர்பில், இச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது தெளிவான வங்கித் தொழில் நெறிகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்கலாம் :—

(அ) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம்; அத்துடன்

(இ) வங்கி அதன் நோக்கங்களைப் பயனுற நிறைவேற்றுவதனையும், அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதனையும் புரிவதனையும் இயலச்செய்வதற்கும், வங்கியானது அதன் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கும் அவசியமான ஏதேனும் கருமம்.

77. (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன். நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகையினதான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணமும் மறியற்றண்டனையுமாகிய இரண்டுக்குமே ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள்குழுவினால் புரியப்பட்டுள்ளவிடத்து, அப்போது—

(அ) அவ்வாட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருப்பின் அக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும்; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாயிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளியும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படல் வேண்டும்:

ஆயின், எப்படியிருப்பினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு பணிப்பாளர் அல்லது அலுவலர், அல்லது அத்தகைய குழுமத்தின் ஒரு பங்காளி, அத்தகைய தவறு தமக்குத் தெரியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு உரிய எல்லாக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென எண்பித்தால், அத்தகைய தவறுக்கு அவர் குற்றவாளியாகக் கருதப்படல் ஆகாது.

78. (1) பணச் சட்டத்தின் 117 ஆம், 125 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், வங்கியின் மூலதனத்திற்கு ஒப்பப்பணத்தொகை செலுத்துவதற்கும். வங்கியினால் வழங்கப்பட்ட எவையேனும் பங்குகளை, கையிருப்புக்களை, கடனீட்டுப்பத்திரங்களை, வாக்குறுதிப்பத்திரங்களை அல்லது வேறு பிணைப்பொறுப்புக்களைக் கொள்வனைசெய்வதற்கும், அவற்றிற்கு உத்தரவாத

மளிப்பதற்கும் அல்லது பிணைப்பொறுப்பாக அவற்றை ஏற்றுக்கொள்வதற்கும் மத்திய வங்கியானது இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(2) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணுக எது எவ்வித மிருப்பினும், இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் வங்கியின் மூலதனத்திற்கு ஒப்பப்பணத்தொகை செலுத்துவதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றன.

79. வங்கியின் கடமைகளைப் புரிதல் பற்றியும் தத்துவங்களைப் பிரயோகித்தல் பற்றியும் எழுத்திலான பொதுவான அல்லது சிறப்புப் பணிப்புக் களைக் காலத்திற்குக் காலம் அமைச்சர் விடுக்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புக்களுக்கு இணங்கியொழுதல் வங்கியின் கடமையாதலும் வேண்டும்.

80. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினுலன்றி—

''அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு நிறுவனம்'' என்பது, பணச்சட்டத்தின் 88ஊ என்னும் பிரிவில் ''கடன் வழங்கு நிறுவனம்'' என்பது எப் பொருளைக்கொண்டுள்ளதோ அதே பொருளுடையதாகும். அத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கு நிறுவனங்கள் எனக் காலத்திற்குக் காலம் பணிப்பாளர் சபையினுல் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு நிறுவனங் களையும் உள்ளடக்கும்;

''பணிப்பாளர்சபை'' என்பது வங்கியின் பணிப்பாளர்சபை எனப் பொருளாகும்;

''மத்தியவங்கி'' என்பது பணச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்தியவங்கி எனப் பொருளாகும்;

''பணச்சபை'' என்பது பணச்சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் அமைக்கப் பட்ட இலங்கை மத்தியவங்கியின் பணச்சபை எனப் பொருளாகும்;

''இலங்கை வங்கி'' என்பது இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி எனப் பொருளாகும்;

''மக்கள் வங்கி'' என்பது 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி எனப் பொருளாகும்;

''பணிப்பாளர்'' என்பது பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் எனப் பொருளாகும்;

''தொழில்முயற்சி'' என்பது, எத்தன்மைத்தான பெயரினுல் அல்லது குறிப்புப்பெயரினுல் அழைக்கப்படுவதும், கூட்டிணைக்கப்பட்டதான அல்லது கூட்டிணைக்கப்படாததுமான ஏதேனும் ஆட்கள் குழுவென்று பொருளாகும் என்பதுடன்; தனியொரு கூட்டுத்தாபனத்தையும் அல்லது தனியார் உரிமையாண்மையையும் உள்ளடக்கும்;

''கைத்தொழில்'' என்பது உல்லாசப் பிரயாணத்தையும், 1966ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இலங்கை உல்லாசப் பிரயாணச்சபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட உல்லாசப் பிரயாணச் சேவை களையும் சுரங்கத் தொழிலையும் கடற்றொழிலையும் உள்ளடக்கும் என்பதுடன், ''கைத்தொழில் தொழில்முயற்சி'' என்னும் சொல்லமைப்பு அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்;

''பங்குதாரர்'' என்பது வங்கியின் பங்குதாரர் ஒருவர் எனப் பொருளாகும்.

## 1979 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பணச்சட்ட (திருத்தச்) சட்டம்

*[ 1979, மாச்சு மாதம் 7 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது ]*

**பணச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பணச்சட்ட (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் பணச்சட்டத்தின் 58 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்ட வாக்கத்தின் 58அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

58அ. (1) இலங்கையில் சட்ட நாணயமாகவிருக்கின்ற ஏதேனும் குற்றிநாணயத்தை, பணச்சபையின் அதிகாரமின்றி, சட்ட நாணயமாகத் தவிர வேறெவ்வகையிலும் பயன்படுத்துகின்ற, அல்லது குற்றிநாணயத்தை உருக்குகின்ற, நொருக்குகின்ற, துளைக்கின்ற அல்லது சிதைக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவுக்கு முரணாகக் கையாளப்பட்டுள்ள ஏதேனும் குற்றிநாணயத்திலிருந்து பெறப்பட்டிருக்கின்றதென்பதை அறிந்தவராக அல்லது நம்புவதற்கு நியாயமான காரணம் உடையவராக ஏதேனும் உலோகத்தை அல்லது பொருளை வேண்டுமென்று பயன்படுத்துகின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது கையாளுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(2அ) பிரிவு 58அ வின் (1) ஆம் உட்பிரிவை அல்லது (2) ஆம் உட்பிரிவை மீறியமை காரணமாகத் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆள் ஒவ்வொருவரும், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் மூவாயிரம் ரூபாவை விஞ்சாத வொரு குற்றப்பணத்திற்கு, அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்ஞாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்குமே ஆளாதல் வேண்டும். 58அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத் தீர்ப்பளிப்பதன்மேல், எந்தக் குற்றிநாணயம் தொடர்பில் தவறு புரியப்பட்டுள்ளதோ அந்தக் குற்றிநாணயம் எதுவும், அல்லது அதிலிருந்து பெறப்பட்ட உலோகம் எதுவும்

அல்லது வேறு பொருள் எதுவும் அரசுக்குப் பறிமுதலாக்கப்படுதல் வேண்டுமென நீதிவானொருவர் கட்டளை ஆக்கலாம்,'' ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும்:—

''(3) எந்தத் தவறுக்காக (2) ஆம் உட்பிரிவினுல் அல்லது (2அ) என்னும் உட்பிரிவினுல் தண்டனை எதுவும் விதித்துரைக்கப்படவில்லையோ அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆள் ஒவ்வொருவரும், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு, அல்லது ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்குமே ஆளாதல் வேண்டும்''.

## 1979ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, வங்கிப் பற்றுக்கள் வரி (நீக்கச்) சட்டம்

*(1979, மார்ச்சு மாதம் 20ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**1970ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, வங்கிப் பற்றுக்கள் வரிச் சட்டத்தை நீக்குவதற்கும் அதனேடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்வினை வான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ஆன ஒரு சட்டம்**

1. இச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, வங்கிப் பற்றுக்கள் வரி (நீக்கச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இது எல்லா நோக்கங்களுக்காகவும், 1979, சனவரி மாதம் 1ஆம் தேதியன்றே நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2. 1975ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1970ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, வங்கிப் பற்றுக்கள் வரிச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

3. 1970ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, வங்கிப் பற்றுக்கள் வரிச் சட்டம் நீக்கப்பட்டமையைப் பொருட்படுத்தாது, 1979ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் அச்சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் வரி, அத்தகைய சட்டம் நீக்கப்படவில்லையென்றாற் போன்று அறவிடப்பட்டுச் சேகரிக்கப்படலாம்.

# 1979 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம்

*[ 1979, மே மாதம் 7 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது ]*

வங்கித் தொழில்புரியா நீதி நிறுவனங்களைக் கட்டுப்பாடு செய்வதற்கும் ஒழுங்கு படுத்துவதற்கும், வைப்பிலிடுவோரின் அக்கறைகளைப் பாதுகாப்பதற்கென அத்த கைய நிறுவனங்கள் பணநீர்மையுள்ளனவாகவும் கடனிறுக்கும் ஆற்றலுள்ளனவாக வும் இருத்தலை உறுதிப்படுத்துவதற்கும், அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற் றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

*1. இச்சட்டமானது, 1979 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, நிதிக் கம்பனி களைக் கட்டுப்படுத்தற் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்று (இத்தேதி. இச்சட்டத்தில் ''நியமித்த தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

## பாகம் I

### நிறுவனங்களைப் பதிவுசெய்தலும் அவற்றுக்கு உரிமமளித்தலும்

*2. (1) இச்சட்டத்தின் இப்பாகமானது—*

*(அ)* ஓர் இலட்சம் ரூபாவுக்குக் குறையாத மூலதனத்தைக்கொண்ட வரை யறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனியாகவுள்ள நிறுவனம் ஒவ் வொன்றுக்கும்;

*(ஆ)* ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட வைப்புப் பணங்களை உடைய நிறுவனம் ஒவ்வொன்றுக்கும்;

*(இ)* வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனிகளாக உள்ளனவும், அவற்றின் மூலதனத்தைக் கூட்டு மொத்தமாக்கும்போது அக்கூட்டு மொத்தம் ஓர் இலட்சம் ரூபாவுக்குக் குறையாததாகவுள்ளதுமான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒன்றிணைந்த அல்லது ஒன்றோ டொன்று தொடர்புள்ள நிறுவனங்களுக்கும்;

*(ஈ)* அவற்றின் மொத்த வைப்புப்பணங்கள் கூட்டுமொத்தமாக்கப்படும் போது ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்டதாகவுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒன்றிணைந்த அல்லது ஒன்றோடொன்று தொடர்புள்ள நிறுவனங்களுக்கும்; அத்துடன்

*(உ)* இச்சட்டத்தின் இப்பாகம் ஏற்புடையதாகவேண்டிய நிறுவனங்க ளென (இதனகத்துப்பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப் படும்) இலங்கை மத்திய வங்கிப் பணச்சபையினது விதப்புரையின் மேல் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் வெளிப்படுத்தப்படும் ஏதேனும் தொகுதியைச் சேர்ந்த அல்லது வகுதியைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும்,

ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இச்சட்டமானது பணச்சட்டத்தின் 127 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனத்துக்கு அல்லது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச்சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஏற்புடையதாதலாகாது.

3. இச்சட்டத்தின் இப்பாகம் ஏற்புடையதாகும் எந்தவொரு நிறுவனமும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு சபையில் பதிவு செய்யப்பட்டிருந்தாலொழிய நியமித்த தேதியிலோ அதற்குப் பின்னரோ தொழில் கொண்டு நடாத்துதலாகாது.

ஆயின், எவ்வாறுயினும், நியமித்த தேதிக்குமுன்னர் தொழில் கொண்டு நடாத்திய அத்தகைய எந்தவொரு நிறுவனமும் அவ்வாறு பதிவுசெய்யப்படாமல் நியமித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்திற்குத் தொழில் கொண்டு நடாத்தலாம்.

ஆயின், மேலும், சபையானது அதன் தனித்தற்றுணிபில் மேற்கூறிய காப்புவாசகத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட எந்த ஒரு நிறுவனத்திற்கும் அவ்வாறு பதிவு செய்யப்படாமல் தொழில் கொண்டு நடாத்துவதற்காக அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்கான ஒரு கால நீடிப்பை, மட்டுமே, வழங்கலாம்.

4 (1) இச்சட்டத்தின் இப்பாகம் ஏற்புடையதாகும் ஒரு நிறுவனத்தைப் பதிவுசெய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதிக்கப்பட்ட படிவத்தில் சபைக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள விபரங்கள் அவரின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையும் செம்மையானவையும் என விண்ணப்பகாரரினாற் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றைக் கொண்டதாக இருத்தலும் வேண்டும்.

(2) ஏதேனும் வெளிப்படுத்துகையிலுள்ள அல்லது தகவலிலுள்ள முக்கிய விபரம் எதுவும் பொய்யானதென அறிந்துகொண்டு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வெளிப்படுத்துகையைச் செய்யும் அல்லது தகவலைக் கொடுத்துதவும் ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) (1) இச்சட்டத்தின் இப்பாகமானது ஏற்புடையதாகும் எந்தவொரு நிறுவனத்தையும் பதிவு செய்வதற்கான விண்ணப்பமானது சபைக்குச் செய்யப்பட்டுள்ளவிடத்து, சபையானது—

(அ) அத்தகைய நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களையும் மற்றும் ஆவணங்களையும் தாமாகவே பரிசோதனை செய்யலாம் அல்லது இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் மூலமாகவோ அத்தகைய பணிப்பாளரினால அதற்கென எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மூலமாகவோ பரிசோதனை செய்விக்கலாம்.

(ஆ) அத்தகைய நிறுவனத்தினால் ஏற்கப்பட்ட, கடனாகப் பெறப்பட்ட அல்லது பரிந்துகேட்கப்பட்ட எந்த ஒரு பணத்தொகையேனும் வைப்புப்பணமாகவுள்ளதா என்றும், அத்தகைய நிறுவனத்தின்

UNIVERSITY OF MORATUWA LIBRARY

அலுவல்கள் அதன் தற்போதைய அல்லது எதிர்கால வைப்பிலிடுவோருக்குப் பாதகமாகக்கூடிய முறையில் நடாத்தப்படுகின்றனவா என்றும் தீர்மானிக்கலாம்.

(2) அத்தகைய நிறுவனம் 3ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு உட்பட்டதல்லவென, அல்லது அத்தகைய நிறுவனத்தின் அலுவல்கள் அதன் தற்போதைய அல்லது எதிர்கால வைப்பிலிடுவோருக்குப் பாதகமாகக்கூடிய முறையில் நடாத்தப்படுகின்றனவெனச் சபை கருதுமிடத்து, சபையானது அத்தகைய நிறுவனத்தைப் பதிவுசெய்ய மறுத்தல் வேண்டும்.

(3) அத்தகைய நிறுவனம் 3 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு உட்பட்டதெனவும், அதன் அலுவல்கள் அதனது தற்போதைய அல்லது எதிர்கால வைப்பிலிடுவோருக்குப் பாதகமாகக்கூடிய முறையில் நடாத்தப்படவில்லையெனவும் சபை கருதுமிடத்து, சபையானது அந்நிறுவனத்தைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் அல்லது இரண்டாம் உட்பிரிவின் கீழான சபையின் முடிவானது முற்றுனதும் இறுதியானதுமாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

6. சபையானது, இச்சட்டத்தின் இப்பாகம் ஏற்புடையதாகும் ஒவ்வொரு நிறுவனத்தையும் பதிவுசெய்தற்காக விதிக்கப்பட்ட படிவத்திலான இடாப்பொன்றை வைத்துப் பேணிவருதல் வேண்டும்.

7. எந்தவொரு நிறுவனமும் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளவிடத்து, சபையானது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க சபை விதிக்கக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமைய விதிக்கப்பட்ட படிவத்திலான உரிமமொன்றை அத்தகைய நிறுவனத்திற்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய உரிமமானது எல்லா நேரங்களிலும் அத்தகைய நிறுவனத்தின் இலங்கையிலுள்ள பிரதான அலுவலகத்தில் அல்லது தொழிலிடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

8. (1) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எந்த ஒரு நிறுவனமும் தொழில் நடாத்தாதொழியுமிடத்து, அவ்வாறு தொழில் நடாத்தாதொழிதல் பற்றிய அறிவித்தல் —

(அ) அத்தகைய நிறுவனமானது கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருக்குமிடத்து அதன் பணிப்பாளரினால் முகாமையாளரினால் அல்லது செயலாளரினால் ;

(ஆ) அத்தகைய நிறுவனமானது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவாகவிருக்குமிடத்து அக்குழுவாக அமையும் ஒவ்வொரு தனியாளினாலும்; அல்லது

(இ) அத்தகைய நிறுவனமானது தனியாளாகவிருக்குமிடத்து அத்தகைய தனியாளினால், அல்லது அவர் இறந்திருப்பின் அவரது சட்டமுறையான பிரதிநிதிகளினால்

அவ்வாறு தொழில் நடாத்தாதொழிதலிலிருந்து மூன்று மாதங்களுக்குள் சபைக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்று கிடைத்ததும் இடாப்பிலிருந்து நிறுவனத்தினது பெயரை அகற்றுதல் வேண்டும் என்பதுடன் அதன் உரிமத்தை இல்லாதாக்குதலும் வேண்டும்.

9 (1) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு நிறுவனமேனும் தொழில் கொண்டு நடாத்தவில்லையென்று சபை நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து, சபையானது அத்தகைய நிறுவனத்திற்குப் பதிவஞ்சல் மூலம் ஓர் அறிவித்தலை அனுப்பி அவ் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள், அது தொழில் கொண்டு நடாத்தா தொழியவில்லையென்பதற்குச் சான்று கொடுத்துதவும்படி அத்தகைய நிறுவனத்தைத் தேவைப்படுத்தலாம் அத்தகைய நிறுவனமானது அத்தகைய சான்றை அத்தகைய காலத்திற்குள் கொடுத்துதவத் தவறுமிடத்து, சபையானது அத்தகைய நிறுவனத்தின் பெயரை இடாப்பிலிருந்து அகற்றிவிடுதல் வேண்டுமென்பதுடன், அதன் உரிமத்தை இல்லாதாக்குதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் நியதிகளின்படி அதன் பெயர் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டுள்ள எந்தவொரு நிறுவனமேனும் இச்சட்டத்தின்கீழ பதிவு செய்யப்படுவதற்கெனச் சபைக்கு அதன் பின்னர் விண்ணப்பித்தால், சபையானது அத்தகைய விண்ணப்பத்தைப் பதிவுசெய்யப்படுவதற்கான புதிய விண்ணப்பமாகக் கருதலாம் என்பதுடன, 5ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவென்றும், அத்தகைய நிறுவனமானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட விதி அல்லது பணிப்பு எதனையும் மீறியமைக்காகக் குற்றவாளியாக இருந்திலதென்றும் சபை திருப்திப்பட்டால் அத்தகைய நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப் படுதலுமாகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றை ஒடுக்குவதற்குத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, சபையானது, அத்தகைய நிறுவனத்தின் பெயரை இடாப்பிலிருந்து அகற்றிவிடுதல் வேண்டுமென்பதுடன், அதன் உரிமத்தை இல்லாதாக்குதலும் வேண்டும்.

10. (1) இச்சட்டத்தின்கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு நிறுவனத்திலுமுள்ள வைப்புப்பணக் கணக்கொன்று பயனற்றுக் கிடந்துள்ளவிடத்து, அதாவது, அத்தகைய வைப்புப் பணத்திலிருந்து பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு மீளப் பெறல் எதுவும் அல்லது அதற்கான சேர்த்தல் எதுவும் இல்லாதவிடத்து (அல்லது அந்த வைப்புப்பணம் தொடர்பாக வைப்பிலிடுபவரினால் அல்லது அவரது சட்டமுறையான பிரதிநிதியினால் எழுத்திலான செய்தித் தொடர்பெதுவும் நிறுவனத்தினால் பெறப்பட்டிராதவிடத்து), வேறெந்தச் சட்டத்திலும் எது எப்படியிருப்பினும், வைப்பிலிருக்கும் பணமும் அதன்மீது திரண்ட வட்டி ஏதேனுமிருப்பின் அதுவும், சபை அவ்வாறு பணித்தால் இலங்கை மத்திய வங்கியிலுள்ள சிறப்புக் கணக்கொன்றுக்கு அத்தகைய நீதிமன்றத்தினால் மாற்றப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு நிறுவனத்திலும் அவரது பெயரில் அல்லது தாம் உரித்துப்பெறும் ஆளொருவரினது பெயரில் அவரது வரவிலிருக்கும் எந்தப் பணமாவது (1) ஆம் உட்பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியிலுள்ள சிறப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ள

தென்று சபையின் திருப்திக்கேற்ப சான்று கொடுத்துநவும் ஆள் எவரும், அத்தகைய ஏதேனும் பணம் தொடர்பில் எழுத்திலான சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் விதிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய நியதிகளுக்கு, நிபந்தனை களுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கமைய, சபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வீதத்தில், திருப்பிக் கொடுக்கும் நாள்வரையில் அத்தகைய பணத்தின்மீதான வட்டியோடு சேர்த்து அல்லது சபை அவ்வாறு தீர்மானித்தால் அத்தகைய வட்டியில்லாமல் அத்தகைய பணத்தை மத்திய வங்கியினின்றும் திரும்பப்பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சிறப்புக் கணக்கிற்கு மாற்றப்படும் எந்தப் பணமும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரைக் கலந்தாலோசித்தபின்னர் சபை தீர்மானிக்கக்கூடிய அத்தகைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்.

## பாகம் II

### நிறுவனங்கள் தொடர்பில் சபைக்குள்ள தத்துவங்களும் பணிகளும், கடமைகளும

11. இப்பாகத்தினதும், III ஆம் பாகத்தினதும் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

12. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சபையானது, நிறுவனங்களுக்கு அல்லது ஏதேனும் தொகுதியையோ வகுதியையோ சார்ந்த நிறுவனங்களுக்கு அத்தகைய நிறுவனங்களின் தொழிலின் ஏதேனும் அம்சமானது நடாத்தப்படவேண்டிய மாதிரியும் முறையும் சம்பந்தமாக பணிப்புகளை விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினுல் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, நிறுவலங்களுக்கு அல்லது ஏதேனும் தொகுதியையோ வகுதியையோ சார்ந்த நிறுவனங்களுக்கு—

(அ) எந்நியதி நிபந்தனைகளின் கீழ் அத்தகைய நிறுவனங்களினுல் வைப்புப்பணம் ஏற்றுக்கொள்ளப்படலாமோ அந்நியதி நிபந்தனைகள், ஒருவரது பெயரில் ஒரு கணக்கில் அதற்கு மேற்பட்ட கணக்குகளில் நிறுவனமொன்றினுல் வைப்பிலிடப்படக் கூடிய ஆகக்கூடிய தொகை, அத்தகைய வைப்புப் பணங்களின் மீது கொடுபடற்குரிய ஆகக்கூடிய வட்டி வீதங்கள், அத்துடன் வைப்புப் பணங்களை கூடிய எக்காலப் பகுதிகளுக்குப் பெறலாமோ அக்காலப் பகுதிகள்;

(ஆ) அத்தகைய நிறுவனங்கள் கணக்குப் புத்தகங்களை அல்லது வேறு பதிவேடுகளை அல்லது ஆவணங்களைப் பேணிவர வேண்டிய மாதிரியும் முறையும்;

(இ) அத்தகைய நிறுவனங்களினுல் எந்நியதி நிபந்தனைகளின் கீழ்கடன் வழங்கப்படலாமோ அந்நியதி நிபந்தனைகள்;

(ஈ) ஏதேனும் கடன் தொடர்பில் அத்தகைய நிறுவனங்களினுல் விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வட்டி வீதம்;

(ஊ) தரகுகள், கழிவுகள், கட்டணங்கள் அல்லது எத்தகையனவுமான வேறு கொடுப்பனவுகள் என்ற வகையில் அத்தகைய நிறுவனங்களுக்குக் கொடுபடக்கூடிய அலலது அத்தகைய நிறுவனங்களினால் விதிக்கப்படக்கூடிய ஆகக் கூடிப் வீதங்கள்;

(ஊ) அத்தகைய நிறுவனங்களினால் எந்நியதி நிபந்தனைகளின் கீழ் முதலீடுகள் செய்யப்படலாமோ அந்நியதி நிபந்தனைகள்;

(எ) அத்தகைய நிறுவனங்களின் மூலதனமும், அத்தகைய நிறுவனங்களின் மொத்த வைப்புப் பணப் பொறுப்புகளுக்கு எந்த விகிதத்தில் அமைய வேண்டுமோ அந்த ஆகக் குறைந்த விகிதம்;

(ஏ) அத்தகைய நிறுவனங்களின் பணநீர்மைச் சொத்துக்கள் அத்தகைய நிறுவனங்களின் மொத்த வைப்புப் பணப் பொறுப்புகளுக்கு எந்த விகிதத்தில் அமைய வேண்டுமோ, அந்த ஆகக் குறைந்த விகிதமும், அத்தகைய விகிதத்தைக் கணிக்கும் பொழுது கணக்கிலெடுக்கப்பட வேண்டிய பணநீர்மைச் சொத்துக்களின் வகுதிகளும்;

(ஐ) எந்தவொரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பிலும் வாடகைக்கெடுக்க உத்தேசிப்பவரொருவர் செய்யவேண்டிய ஆகக் குறைந்த தொடக்கக் கொடுப்பனவும் வெவ்வேறு வகுப்பினவான கொடுக்கல் வாங்கல்களுக்குமுரிய குறிப்பிட்ட வெவ்வேறான தொடக்கக் கொடுப்பனவும்; அத்தகைய ஆகக்குறைந்த தொடக்கக் கொடுப்பனவானது பண்டங்களினது பெறுமதியின் நூற்றுவீதமாக எடுத்துக்கூறப்படலாம்; அத்துடன்

(ஒ) அத்தகைய நிறுவனங்களினாற் செய்யப்பட்ட கடன்களுக்கும் முதலீடுகளுக்குமான அனுமதிக்கத்தக்க ஆகக்கூடிய முதிர்வு காலங்களும், பல்வேறு வகையான கடன் சேவைத் தொழிற்பாடுகளுக்குத் தேவைப்படக்கூடிய அல்லது அனுமதிக்கப்படக்கூடிய பிணைப் பொறுப்பின் தன்மையும் தொகையும்,

என்பன தொடர்பில் சபையினால் பணிப்புக்கள் விடுக்கப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் பணிப்பினால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய வட்டி வீதம், அத்தகைய பணிப்பு விடுக்கப்பட்ட தேதிக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்புப் பணம் தொடர்பில் அல்லது எடுக்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் பணிப்பிலுள்ள எதுவும்—

(அ) அத்தகைய ஏதேனும் வைப்புப்பணம் தொடர்பில் அல்லது கடன் தொடர்பில் அத்தகைய பணிப்பு விடுக்கப்பட்ட தேதிக்கு முன்னர் திரண்ட ஏதேனும் வட்டிக்கு ஏற்புடையதாதலாகாது; அல்லது.

(ஆ) அத்தகைய பணிப்பு விடுக்கப்பட்ட தேதிக்கு முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்புப் பணத்தின் மீது செலுத்தற்பாலதான வட்டிவீதத்திலான குறைப்பனவை, அத்தகைய வைப்புப்பணம் பற்றிய ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் மீறுகையாக அத்தகைய குறைப்பனவு அமையுமாயின், தேவைப்படுத்துதலாகாது.

(4) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக (1) ஆம் உட்பிரிவிலும் (2) ஆம் உட்பிரிவிலும் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறுன அத்தகைய கருமங்கள் பற்றியும், அவற்றின் கண் தரப்பட்டுள்ள முறையிலும், சபையானது, குறிப்பிட்ட ஏதேனும் நிறுவனத்துக்கு அவசியமானவிடத்து பணிப்புக்கள் விடுக்கலாம்.

ஆயின், எவ்வாருயினும் தகுதிவாய்ந்த நீதிமன்றம், அந்தக் குறிப்பிட்ட நிறுவனத்தினல் அதற்கென அந்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பத்தின் மீது அத்தகைய ஏதேனும் பணிப்பு வலுவிலிருக்கும் போது எந்நேரத்திலும் அத்தகைய பணிப்புக்கு அமைந்ததாக'இராமல் அதன் தொழிலைக் கொண்டு நடாத்தும்படி அந்த நிறுவனத்துக்கு அனுமதியளித்து வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம், அல்லது அந் நீதிமன்றம் தீர்மானிக்கக் கூடியவாருன அத்தகைய முறையில் அத்தகைய பணிப்பை வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம் என்பதுடன், மேற் சொல்லப்பட்டவாருக அந்நீதிமன்றத்தால் செய்யப்படும் ஏதேனும் வெளிப்படுத்துகை, சபையினல் ஆக்கப்பட்ட பணிப்பில் முரணுக எது எப்படியிருப்பினும், பயனுடையதாதலும் வேண்டும்.

13. சபையானது எந்தவொரு நிறுவனத்தினதும் உரிமையாளரை, பங்காளரை, பணிப்பாளரை. முகாமையாளரை, செயலாளரை அல்லது ஊழியரை, அத்தகைய நிறுவனத்தினல் ஏற்கப்பட்ட, கடனுகப் பெறப்பட்ட அல்லது பரிந்து கேட்கப்பட்ட பணத்தொகையெதுவும் வைப்புப் பணமா என்பதை நிச்சயிப்பதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய எல்லாத் தகவல்களையும கொடுத்துதவும்ாறு தேவைப்படுத்தலாம்.

14. (1) சபையானது காலத்திற்குக் காலம் பணிப்புக்களின் மூலம்—

(அ) பொதுவான நிறுவனங்கள் அல்லது ஏதேனும் தொகுதியை அல்லது பகுதியைச் சார்ந்த நிறுவனங்கள் தமது அல்லது அதன் கடன்களினதும் முதலீடுகளினதும் தொகையை அதிகரிப்பதனைத் தடை செய்யலாம்; அல்லது.

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களினல் கொடுக்கப்படும் கடன்களினதும் முதலீடுகளினதும் தொகையானது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளினுள் எந்த வீதத்தில் அதிகரிக்கப்படக்கூடுமோ அந்த வீதத்துக்கான வரையறைகளை நிர்ணயிக்கலாம்;

ஆயின், எவ்வாருயினும், அத்தகைய ஏதேனும் பணிப்பிலுள்ளது எதுவும் அத்தகைய நிறுவனங்களின் கடன்களினதும் முதலீடுகளினதும் தொகையை அப்பணிப்பு விடுக்கப்பட்ட தேதியில் நிலுவையாக இருக்கும் தொகையிலும் பார்க்கக் குறைவாகக் குறைக்கும்படி அந்நிறுவனங்களைத் தேவைப்படுத்துவதாகக் கருதப்படுதலாகாது.

(2) ஒராம், உட்பிரிவின் கீழான பணிப்பொன்று, அந்த உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுவனததின் எல்லாக் கடன்களுக்கும் முதலீடுகளுக்கும், அல்லது அத்தகைய கடன்கள், முதலீடுகள் என்பனவற்றின் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்புக்கும் அல்லது வகுப்புகளுக்கும் ஏற்புடையதாகலாம்; எவ்வாருயினும், அத்தகைய பணிப்பானது பொதுவாக எல்லா நிறுவனங்களுக்கும் அல்

லது அத்தகைய நிறுவனங்களின் எந்தவொரு தொகுதிக்கும் அல்லது வகுதிக்கும் ஒரு சீராகவும் வேறுபாடின்றியும் ஏற்புடையதாதல் வேண்டும்.

15. (1) இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் எந்தவொரு நிறுவனத்தினதும் கணக்குப் புத்தகங்களையும், கணக்குகளையும் எந்த நேரத்திலும் பரிசோதனை செய்யலாம். அல்லது தமது திணைக்களத்திலுள்ள எந்தவோர் அலுவலருக்கும் பரிசோதனை செய்ய அதிகாரம் அளிக்கலாம்.

(2) அத்தகைய பரிசோதனையின் மீதான அறிக்கையானது அத்தகைய பரிசோதனை முடிந்தவுடனேயே வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் மத்திய வங்கி ஆளுநருக்குக் கொடுத்துதவப்படுதல் வேண்டும். வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அத்தகைய பரிசோதனைக்கான செலவுத் தொகை நிறுவனத்திடம் இருந்து அறவிடலாம்.

(3) (அ) எந்தவோரு நிறுவனத்தினதும் எவரேனும் உரிமையாளருக்கு பங்காளருக்கு, பணிப்பாளருக்கு, முகாமையாளருக்கு, செயலாருக்கு அல்லது ஊழியருக்கு, சத்தியக் கட்டளைச் சட்டத்துக்கிணங்க சத்தியம் அல்லது உறுதி எடுத்தோதலும்.

(ஆ) எந்தவொரு நிறுவனத்தினதும் எவரேனும் உரிமையாளரை, பங்காளரை, பணிப்பாளரை, முகாமையாளரை, செயலாளரை அல்லது ஊழியரை, அத்தகைய நிறுவனத்தினது அலுவல்களின் உண்மையான நிலைமையையும், அத்தகைய நிறுவனம் அதன் தற்போதைய அல்லது எதிர்கால வைப்பிலிடுவோருக்குப் பாதகமாகக் கூடியமுறையில் நடாத்தப்படுகின்றதாவென்பதையும் நிச்சயிப்பதற்கு பணிப்பாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலும்; அத்துடன்

(இ) எந்தவொரு நிறுவனத்தினதும் எவரேனும் உரிமையாளரை, பங்காளரை, பணிப்பாளரை, முகாமையாளரை செயலாளரை அல்லது ஊழியரை, தம்வசத்திலிருப்பனவும் அவசியமான ஏதேனும் தகவலைக் கொண்டுள்ளனவும் அல்லது கொண்டிருக்கும் சாத்தியமுடையனவுமான புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் எவற்றையும் சோதனைக்குக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தலும்,

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(4) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அத்தகைய பணிப்பாளரினால் அவ்வாறு வேண்டப்படும் பொழுதெல்லாம் ஏதேனும் நிறுவனத்தின் காசு மீதிகள், அதன் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவையுட்பட அந்நிறுவனத்தின் எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் கிடைக்கக்கூடிய

தாக்குதல், அந்நிறுவனத்தின் ஒவ்வோர் உரிமையாளரதும், பங்காளரதும், பணிப்பாளரதும், முகாமையாளரதும், செயலாளரதும் அல்லது ஊழியரதும் கடமையாதல் வேண்டும்.

16. (1) இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்தாமாகவேனும் அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மூலமாகவேனும் ஏதேனும் நிறுவனத்தின் அலுவல்களைப் பரிசோதனை செய்த பின்னர் அல்லது நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் மீது அந்நிறுவனம் கடனிறுக்கவகையற்றதென்று, அல்லது அதன் வைப்பிலிடுவோரின் கோரிக்கைகளைச் சரிசெய்வதற்கு முடியாமற்போகும் சாத்தியமுடையதென்று அல்லது அது தொடர்ந்து தொழில் நடாத்துவது அதன் வைப்பிலிடுவோருக்கு அல்லது கடன் கொடுத்தோருக்கு நட்டம் விளைவிக்கும் சாத்தியமுடையதென்று திருப்திப்படும் ஏதேனும் விடயத்தில், சபையிடம் சமர்ப்பிப்பதற்காகப் பணிப்பாளரானவர் அதற்கிணங்கவுள்ள அறிக்கையொன்றை மத்திய வங்கி ஆளுநருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன் நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் மீளாய்வு செய்ததன் மேல் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென்று சபையானது கருதினால், அந்நிறுவனத்தை இலங்கையில் தொழில் நடாத்துதலை உடனடியாக இடைநிறுத்தும்படி பணித்தும், அந்நிறுவனத்தின் எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் சொத்துக்களையும் பொறுப்பேற்கும்படியும், அந்நிறுவனம் தொடர்ந்து தொழில் நடாத்துதலைத் தடுப்பதற்கு அவசியமான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும்படியும் பணிப்பாளரைப் பணித்தும் சபையானது கட்டளையாக்கலாம்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது வேறு சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், (1)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மீளாய்வு செய்யப்படுதலை அல்லது ஒழிக்கப்படுதலை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன் காரணமாக உறப்பட்ட அல்லது உறப்படும் சாத்தியமுடைய அல்லது உறப்பட்டதாகச் சார்த்தப்படும் ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(3) ஏதேனும் நிறுவனம் தொடர்பில் (1)ஆம் உட்பிரிவின்கீழ் சபையினால் ஆக்கப்படும் கட்டளையானது, அக்கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்காலம் முடிவடைவதன்மேல் பயனில்லாதொழிதல் வேண்டும்; அத்துடன் சாத்தியப்படக்கூடிய விரைவிலும் எச்சந்தர்ப்பத்திலும் சொல்லப்பட்ட காலம் முடிவடையுமுன்னரும் —

(அ) அந்நிறுவனம் நிபந்தனையில்லாமலோ அல்லது பொது மக்கள் நலனுக்கு அல்லது அந்நிறுவனத்தின் வைப்பிலிடுவோரினதும் வேறு கடன் கொடுத்தோரினதும் நலனுக்கு அவசியமானதெனச் சபை கருதக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமையவோ மீளவும் தொழில் நடாத்தும்படி அனுமதித்துக் கட்டளையிடுதல் ; அல்லது

(ஆ) அந்நிறுவனத்தை ஒடுக்குவதற்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்திற்கு இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு விண்ணப்பிக்குமாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரைச் செய்தல்,

சபையினது கடமையாதல் வேண்டும்.

(4) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் ஏதேனும் விண்ணப்பத்தைச் செய்ததன்மேல் தகுதிவாய்ந்த நீதிமன்றமானது —

(அ) கம்பனியாகவுள்ள ஏதேனும் நிறுவனத்தை ஒடுக்கும்படி கட்டளை யிடலாம்; அத்துடன் அதற்கிணங்க நீதிமன்றத்தின் மேற்பார்வைக் கமைய கம்பனிகள் ஒடுக்கப்படுவது சம்பந்தமான கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய நிறுவனத்தின் ஒடுக்கல் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்; அல்லது

(ஆ) (கம்பனியல்லாத) ஆளொருவராகவுள்ள அல்லது கூட்டிணைக்கப் படாத ஆட்கள் குழுவாகவுள்ள ஏதேனும் நிறுவனத்தை ஒடுக் கும்படி கட்டளையிடலாம்; அத்தகைய ஒடுக்கல் எதிலும் அந் நிறுவனத்தின் சொத்துக்கள் அதன் பொறுப்புக்களைச் சரிசெய் வதற்குப் போதாதனவாகவிருக்குமிடத்து, நீதிமன்றமானது, அவ் வாளினது அல்லது அக்குழுவாக அமையும் ஒவ்வொரு தனியாளி னதும் சொத்துக்கள் அத்தகைய நிறுவனத்தை ஒடுக்கும் நோக்கத் துக்காக ஒழிப்போனுக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல் வேண்டு மெனக் கட்டளையிடலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நிறுவனமொன்றை ஒடுக்கும்போது அந்நிறுவனத்தின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியானது ஒழிப்போன் தகுந்ததெனக் கருதும் அத்தகைய முறையிலும் அத்தகைய அடிப்படையிலும் நிச்சயிக்கப்படுதல் வேண்டும். தகுதிவாய்ந்த நீதிமன்றமானது, ஒடுக்கற் கட்டளை ஆக்கப்பட்ட பின்னர் எந்த நேரத்திலும் எல்லாச் சொத்துக்களையும் காசாக்கும்படி ஒழிப்போனுக்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன், எவரேனுமாளை அந்நிறுவனத்திற்கு உரித்தானதும் அவர் வசமிருப் பதுமான ஏதேனும் பணத்தையும், ஆதனத்தையும், அல்லது புத்தகங்களையும் பத்திரங்களையும் உடனடியாகவோ குறிப்பிட்ட காலத்திற்குள்ளோ ஒழிப் போனுக்குச் செலுத்தும்படி, ஒப்படைக்கும்படி உரித்து மாற்றும்படி, மீள ஒப்ப டைக்கும்படி அல்லது கைமாற்றும்படி தேவைப்படுத்தலாம் நிறுவனத்தை ஒடுக்குவதற்கான திட்டமொன்று ஒழிப்போனல் தயாரிக்கப்பட்டு உறுதிப் படுத்தலுக்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், அந்நிறுவனத்தை ஒடுக்கலானது, அத்தகைய திட்டத்திற் கிணங்க நிறைவேற்றப்படுதலும் வேண்டும்,

(6) இப்பிரிவின் கீழான விண்ணப்பத்தைப் பின்பற்றி அல்லது வேறுவித மாக ஏதேனும் நிறுவனத்தை ஒடுக்குவதற்கான கட்டளை ஆக்கப்படும் ஏதே னும் விடயத்தில், அப்பொழுது, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது சபை யினல் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் அத்தகைய ஒடுக் கலின் நோக்கங்களுக்காக ஒழிப்போனுக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(7) கம்பனியல்லாத நிறுவனமொன்றை ஒடுக்குவதற்கான ஒரு கட்டளை ஆக்கப்படுமிடத்து வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணுக எது எவ்வாறிருப்பினும், (6) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஒழிப்போனது

ஊதியமும், ஒடுக்கலின்போது தரந்த முறையில் உறப்பட்ட செலவுத் தொகைகள், கட்டணங்கள், செலவுகள் என்பன யாவும், மற்றெல்லா உரிமைக் கோரிக்கைகளிலும் பார்க்க முதன்மை பெறுதல் வேண்டும் என்பதோடு ஒடுக்கப்படும் நிறுவனத்தின் சொத்துக்களிலிருந்து கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(8) கட்டளையொன்றில் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமைய ஏதேனும் நிறுவனத்தின் தொழிலை மீள நடாத்துவதற்கு அனுமதி அளித்து (3)ஆம் உட்பிரிவின்கீழ் சபையினல் அத்தகைய கட்டளையாக்கப்பட்டுள்ளவிடத்து, அக்கட்டளை வலுவிலிருக்கும்போது எந்நேரத்திலும் நிறுவனத்தினல் அதற்காக விண்ணப்பம் செய்யப்படுவதன் மேல் தகுதிவாய்ந்த நீதிமன்றமானது, அந்நிறுவனம் நிபந்தனையின்றித் தொழிலை மீள நடாத்துவதற்கு அனுமதியளித்து அல்லது சபையினல் கூறிக்கப்பட்ட எல்லா நியதிகளையும் அல்லது அவற்றுள் எதனையும் நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய முறையில் வேறுபடுத்தி அல்லது திருத்தி வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம்; அத்துடன் அத்தகைய ஏதேனும் வெளிப்படுத்துகையானது (3)ஆம் உட்பிரிவின்கீழ் சபையினல் ஆக்கப்பட்ட கட்டளையில் எது எவ்வாறிருப்பினும் பயனுள்ளதாதல் வேண்டும்.

அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்திற்கு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் எதிர்வாதியாகப் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் மீதான விசாரணையின்போது சபையின் சார்பில் விசாரிக்கப்படுவதற்கும் சான்று அளிப்பதற்கும் உரித்துடையவராதலும் வேண்டும்.

(9) மூன்றும் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஏதேனும் நிறுவனத்தை ஒடுக்குவதற்கான விணணப்பம் பணிப்பாளரினல் செய்யப்படும் ஏதேனும் விடயத்தில் —

(அ) அந்நிறுவனமானது, அவ்விண்ணப்பம் முடிவுறுதிருக்கும் காலத்தின் போது நீதிமன்றத்தினல் தொழில் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதாகவிருந்தால் ஒழியவும், நீதிமன்றத்தினல் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கிணங்கவன்றியும், அவ்வாறு தொழில் கொண்டு நடாத்துதலாகாது; அத்துடன்.

(ஆ) நீதிமன்றமானது, அது அவசியமெனக் கருதக்கூடியவாறன அத்தகைய விசாரணையின் பின் அந்நிறுவனமானது கடனிறுக்கவகையற்றதாக இல்லை என்று கருதினல், அந்நிறுவனமானது, நிபந்தனையின்றியோ அல்லது பொதுமக்கள் நலனுக்கு அல்லது அந்நிறுவனத்தின் வைப்பிலிடுவோரினதும் வேறு கடன் கொடுத்தோரினதும் நலனுக்கு அவசியமென நீதிமன்றம் கருதக்கூடியவாறன அத்தகைய நிபந்தனைகளுக்கமையவோ தொழிலை மீள நடாத்துவதற்கு அனுமதியளித்து வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம்.

(10) இப்பிரிவின் கீழ் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினல் ஆக்கப்படும் கட்டளையொவ்வொன்றும், உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்

படுவதற்கு அமைந்ததாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டின்போது குடியியல் வழக்குகளில் மேன்முறையீடுகள் செய்தல் தொடர்பான குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின் விடயத்தில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்;

ஆயின், (9) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான கட்டளையொன்று முற்றானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டிற்கமைந்ததாதலுமாகாது.

*(11)* இப்பிரிவின் கீழ்த் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றிற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஐயாயிரம் ரூபாய் பெறுமதி கொண்ட வழக்கொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(12)* இப்பிரிவில் ஏதேனும் நிறுவனம் தொடர்பில் 'தகுதிவாய்ந்த நீதிமன்றம்' என்பது கொழும்பு மாவட்ட நீதிமன்றம் என அல்லது இலங்கையில் அந்நிறுவனத்தின் பிரதான அலுவலகம் நடாத்தி வரப்படும் மாவட்டத்திலுள்ள மாவட்ட நீதிமன்றம் எனப் பொருளாகும்.

*(13)* (அ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அத்தகைய பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தும் பொழுது, தகவல் எதையேனும் கொடுத்துதவ அல்லது புத்தகம், பதிவேடு அல்லது வேறு ஆவணம் எதனையேனும் காண்பிக்கத் தவறும், அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அத்தகைய பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் இப்பிரிவின் கீழ் அல்லது 15ஆம் பிரிவின் கீழ் பரிசோதனை யெதனையும் செய்வதைத் தடை செய்யும் அல்லது அனுமதிக்கத் தவறும் ஏதேனும் நிறுவனத்தின் உரிமையாளர், பங்காளர், பணிப்பாளர் முகாமையாளர், செயலாளர் அல்லது ஊழியர் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(ஆ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் எவருக்கும் இப்பிரிவின் கீழ் அல்லது 15 ஆம் பிரிவின் கீழ் கொடுத்துதவப்படும் ஏதேனும் அறிக்கையில் அல்லது தகவலில், பொய்யானதென்று அவர் அறிந்துள்ள கூற்று எதனையும் செய்யும் எந்தவோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

17. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது ஏதேனும் விதியின் ஏற்பாடுகளை, அல்லது அதன் கீழ் விடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட பணிப்பை மீறும் அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படும் இச்சட்டத்தில் கீழான ஏதேனும் தவறின் விடயத்தில்—

(அ) அவ் ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருக்குமிடத்து அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் ஒவ்வொருவரும்: அத்துடன்.

(ஆ) அவ் ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்படாத குழுவாகவிருக்கும் இடத்து, அத்தகைய குழுவின் உறுப்பினராகவுள்ள தனியாள் ஒவ்வொருவம்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய ஆள் எவரும் அத்தவறுனது தனது அறிவின்றிப் புரியப்பட்டதென்றும், அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குத் தாம் தகுந்த ஊக்கம் யாவற்றையும் பிரயோகித்தாரெனவும் எண்பித்தால் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

(3) மூன்றும் பிரிவின், 15 ஆம் பிரிவின் அல்லது 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறியமை காரணமாக அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறியமை காரணமாக இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆளொவ்வொருவரும் மாவட்ட நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியலுக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றத் தருணத்திற்த அல்லது அத்தகைய மறியலும் குற்றப்பணமும் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(4) மூன்றும் பிரிவின்; 15 ஆம் பிரிவின் அல்லது 16ம் ஆம் பிரிவின் கீழான தவறொன்று அல்லாத தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆளொவ்வொருவரும் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆறு மாதத்திற்கு மேற்படாத ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகையான, மறியலுக்கு அல்லது இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியலும் குற்றப்பணமும் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

## பாகம் III
## பொது

18. (1) சபையானது, இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக விதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், சபையானது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்:—

(அ) நிறுவனங்களைப் பதிவு செய்தலும், அத்தகைய பதிவு செய்தலுக்காகச் சபைக்குக் கொடுபடற்குரிய கட்டணங்களும்,

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள்,

(இ) ஏதேனும் நிறுவனத்தினுல் அல்லது ஏதேனும் தொகுதியையோ அல்லது வகுதியையோ சேர்ந்த நிறுவனங்களினுல் பொது மக்களிடமிருந்து பண வைப்புக்களைப் பரிந்து கேட்கும் ஏதேனும் விபரமஞ்சரி அல்லது விளம்பரம் வழங்கப்படுவதை ஒழுங்குபடுத்தலும் அல்லது தடைசெய்தலும், அத்தகைய விபர மஞ்சரி அல்லது விளம்பரம் எந் நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படலாம் என்பதுவும்.

19. சபையினல் அதற்கென ஆக்கப்படக்கூடிய அத்தகைய விதிகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கமையவும் அவற்றுக்கிணங்கவும் சபையானது இச்சட்டத்தின் நோக்கங்களுள் எவற்றுக்காகவேனும் சபையைப் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கான அதன் அதிகாரத்தை, இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் எவருக்கேனும் எழுத்தில் கையளிக்கலாம்; எப்படியிருப்பினும், சபையானது அத்தகைய அலுவலரினற் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயலுக்காக அல்லது காரியத்துக்காகப் பொறுப்புள்ளதாகவும் தொடர்ந்து பொறுப்புள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

20. இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன் கொடுக்கும் நோக்கத்துக்காக, அமைச்சர், பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளைச் சபைக்கு எழுத்திற் கொடுக்கலாமென்பதுடன், சபையானது அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

21. வேறு ஏதேனும் சட்டத்தில் முரணுக எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டுல்.

22. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினுலொழிய—

''மூலதனம்'' என்பது செலுத்தப்பட்ட மூலதனம் எனவும் நிரந்தரமான கட்டில்லா ஒதுக்குகள் எனவும் பொருளாகும் என்பதுடன், சபையினல் அவ்வாறு தீர்மானிக்கப்படின், பிணைப்பொறுப்பற்ற தொகுதிக் கடன் பத்திரங்களினதும் வேறுகடன் முறிகளினதும் முகப்பெறுமதியையும் உள்ளடக்கும்; இந்தத் தொகுதிக் கடன் பத்திரங்களும் கடன் முறிகளும் நிறுவனமானது ஒழித்துக்கட்டப்படும் சந்தர்ப்பத்தில், அல்லது மூலதனம் திருப்பிக் கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது குறைக்கப்படும் சந்தர்ப்பத்தில், நிறுவனத்தின் வைப்புப் பணங்களுக்கும் வேறு கடன் பேறுகளுக்கும் பின்னரே முதன்மை பெறுதல் வேண்டும் என்பதோடு அவற்றுக்குக் கீழமைந்தனவாக இருத்தலும் வேண்டும்; அத்துடன், சபையின் சம்மதத்துடனன்றி அவை குறைக்கப்படுதலும் அல்லது திருப்பிக் கொடுக்கப்படுதலும் ஆகாது;

''பண்டங்கள்'' என்பது பண்ட விற்பனைக் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளுடையதாகும்;

''வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை'' என்பது கொள்வனவு செய்வதற்கான விருப்புரிமையின்பேரில் பண்டங்களை வாடகைக்குக் கொடுப்பதற்கான (அவ் உடன்படிக்கையானது வார வீத, இரு வாரவீத அல்லது மாதவீத கொடுப்பனவுகளைக் கேள்வு என, தவணைக் கட்டணமென, வாடகையென அல்லது வேறு விதமானவையென விபரித்தாலும்சரி அல்லவாயினுஞ்சரி) உடன்படிக்கையென பொருளாகும்; ஆனல்—

(அ) அதில் அடங்கியுள்ள பண்டங்களின் சொத்துவமானது உடன்படிக்கை செய்யப்பட்ட நேரத்திலோ பண்டங்கள் ஒப்படைக்கப்பட்ட போதிலோ பண்டங்கள் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலுமோ சென்றடையும் ஏதேனும் உடன்படிக்கையை அல்லது

(ஆ) எந்த உடன்படிக்கையின்கீழ் பண்டங்களை வாடகைக்கு எடுக்கும் அல்லது கொள்வனவுசெய்யும் ஆளொருவர் உடன்படிக்கையில் அடங்கியுள்ள பண்டங்களைப் போன்ற அதே தன்மையனவான அல்லது விவரணத்தினவான பண்டங்களை விற்கும் தொழிலில் அல்லது வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவராகவுள்ள அந்த ஏதேனும் உடன்படிக்கையை உள்ளடக்காது.

''வாடகைக்கெடுப்பவர்'' என்பது வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் எவருக்குப் பண்டங்கள் வாடகைக்கு விடப்பட்டனவோ, அல்லது விற்க உடன்பட்டுக் கொள்ளப்பட்டதோ அவ்வாளெனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கெடுப்பவருக்குள்ள உரிமைகள் அல்லது பொறுப்புக்கள், சாட்டுதல்மூலம் அல்லது சட்டச் செயற்பாட்டின் மூலம் சென்றடைந்துள்ள ஆளொருவரையும் உட்படுத்தும்;

''நிறுவனம்'' என்பது வைப்புப்பணமாகப் பணம் ஏற்பதையும் அதன் மீதான வட்டியைக் கொடுப்பதையும், அத்துடன்—

(அ) வட்டிக்குப் பணம் கடன் கொடுத்தலையும்; அல்லது

(ஆ) எந்தகையதுமான எம்முறையிலேனும் பணத்தை முதலீடு செய்தலையும்; அல்லது

(இ) எத்தகையதுமான எம்முறையிலேனும் வட்டிக்குப் பணம் கடன் கொடுத்தலையும் பணத்தை முதலீடு செய்தலையும்,

தொழிலாகக் கொண்டுள்ள அல்லது தொழிலின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ள கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத எவரேனும் ஆள் என அல்லது ஆட்கள்குழு எனப் பொருளாகும்.

''கடன்'' என்பது ஏதேனும் முற்பணத்தை, அல்லது ஏதேனும் விற்பனைக் கொடுப்பனவைப் பின்போடுதலை அல்லது வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை சம்பந்தமான கொடுக்கல் வாங்கற் கொடுப்பனவைப் பின்போடுதலை உட்படுத்தும்;

''விதித்துரைக்கப்பட்ட'' என்பது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட எனப் பொருளாகும்.

# 1979 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, இலங்கை வங்கித்தொழிலர் நிறுவக (கூட்டிணைத்தற்) சட்டம்

[1979, ஏப்றில் மாதம் 25 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

இலங்கை வங்கித்தொழிலர் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

(இலங்கை) வங்கித்தொழிலர் பயிற்சி நிறுவகம் என அழைக்கப்படும் நிறுவகமொன்று, வங்கி ஊழியர்களுக்குத் தகுந்த பயிற்சியளிப்பதற்கு ஏற்பாடுசெய்யும் நோக்கத்துக்கெனவும், அந்நிறுவகத்தினது ஆளுநர் குழுவின் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நெறிகளுக்கிணங்க அந்நிறுவகத்தின் வேறு குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கெனவும், இலங்கை மத்திய வங்கியின் ஆதரவின்கீழும் அத்துடன் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கிகள் கழகம் என்பனவற்றின் உதவியோடும் ஒத்துழைப்போடும் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்திநான்காம் ஆண்டு இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட நிறுவகம் அதன் குறிக்கோள்களை அதன் பின்னர் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதாதலாலும், சொல்லப்பட்ட நிறுவகம் கூட்டிணைக்கப்படுவது இப்போது விரும்பத்தக்கதாகவுள்ள தாதலாலும்;

1. இச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, இலங்கை வங்கித் தொழிலர் நிறுவக (கூட்டிணைத்தற்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று (இலங்கை) வங்கித் தொழிலர் பயிற்சி நிறுவகத்தின் ஆளுங் குழு உறுப்பினர்களாகவுள்ள ஆட்களும், இலங்கை வங்கித்தொழிலர் நிறுவகத்தினது ஆளுஞ் சபையாக இதன்பின்னர் அமையும் அத்தகைய வேறு ஆட்களும், அத்துடன் இலங்கை வங்கித் தொழிலர் நிறுவகத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகைய வேறு ஆட்களும் (இதன்பின்னர் இச்சட்டத்தில் ''நிறுவகம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை வங்கித் தொழிலர் நிறுவகம் ஒன்னும் பெயர் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாகவிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகமானது இடையறாவழியுரிமையும் பொது இலச்சினை என்றும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

3. நிறுவகத்தின் குறிக்கோள் பின்வருவனவாகும்—

(அ) வங்கித்தொழிலின் கோட்பாட்டையும் நடைமுறையையும் அத்துடன் அதனோடு உறவுபட்ட பாடங்களையும் கற்பதில் வங்கித் தொழில் நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களுக்கும் போதனையும் பயிற்சியும் ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய நோக்கத்துக்காக விரிவுரைகள், கலந்துரையாடல்கள், நூலகவசதிகள் என்பன உட்பட எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்தல்;

(ஆ) பரீட்சைகளை நடாத்துதலும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடை கின்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குதலும்;

(இ) வங்கித்தொழிலர்கள் அக்கறைகொண்டுள்ள கருமங்கள்மீது கலந் துரையாடல்களை நடாத்துவதற்கு வசதியளித்தலும் அவற்றை ஊக்குவித்தலும்; அத்துடன்

(ஈ) வங்கித்தொழிலின் நலன்களை முன்னேற்றுவதற்கு விரும்பத்தக்கன வாக இருக்கக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல்.

4. (1) நிறுவகத்தின் அலுவல்கள், நிறுவகத்தின் அப்போதைக்கான விதி களுக்கமைய. பின்வருவோரைக் கொண்டுள்ள ஆளுஞ் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்; அது. இதன்பின்னர் இச்சட்டத்தில் ''சபை'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்:—

(அ) தவிசாளர்; அவர், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவராகவும் அவ்வங்கியின் பிரதி ஆளுநர் ஒருவராகவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) துணைத் தவிசாளர்; அவர், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவராகவும் அந்த ஆளுநரது உதவி யாளர் ஒருவராகவும் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) சபையின் ஏனைய பத்து உறுப்பினர்கள்—

(i) அவர்களுள் இருவர், இலங்கை வங்கியினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வங்கியின் ஊழியர்களாக இருத்தல் வேண்டும்;

(ii) அவர்களுள் இருவர், மக்கள் வங்கியினால் பெயர்குறித்து நியமிக் கப்படும் அவ்வங்கியின் ஊழியர்களாக இருத்தல் வேண்டும்;

(iii) அவர்களுள் இருவர், இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் தவிர்ந்த வேறு வர்த்தக வங்கிகளாகவுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்தகைய இரு உறுப்பினர்களும் அத்தகைய வங்கித்தொழில் நிறுவனங்களின் ஊழியர்களாக இருத்தல் வேண்டும்;

(iv) அவர்களுள் ஒருவர், வர்த்தக வங்கிகளாக இராத வங்கித் தொழில் நிறுவனங்களின் இடையே செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையின்மூலம் அத்தகைய வங்கித் தொழில் நிறுவனங் களால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்தகைய உறுப்பினர், அத்தகைய ஏதேனும் வங்கித்தொழில் நிறு வனத்தின் ஊழியரொருவராக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(v) அவர்களுள் மூவர், அந்நிறுவகத்தின் இணையுறுப்பினர்கள், கூட்டுறுப்பினர்கள் என்போர் மத்தியிலிருந்து அந்நிறுவகத்தின் இணையுறுப்பினர்களாலும் கூட்டுறுப்பினர்களாலும் தேர்ந் தெடுக்கப்படுதல் வேண்டும்

(2) இச்சட்டம் தொடங்கும் தேதியன்றுள்ள (இலங்கை) வங்கித் தொழிலர் பயிற்சி நிறுவகத்தின் ஆளுங் குழுவானது, (1) ஆம் உட்பிரிவில் முரணுகை எது எப்படியிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இரண்டாண்டு காலத்துக்கு நிறுவகத்தின் சபையாக இருத்தல் வேண்டும்.

5. நிறுவகத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமைய நிறுவகமானது—

(அ) நிறுவகத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமான அல்லது விருப்பத்தக்கனவான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்யலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம்;

(ஆ) நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக நிதியமொன்றைத் தாபித்துப் பேணிவரலாம், ஏதேனும் வங்கிக் கணக்கைத் தொடங்கிப் பேணிவரலாம், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைபொறுப்பு இல்லாமல் பணங்களைக் கடனுகப் பெறலாம் அல்லது திரட்டலாம், அத்துடன் நிறுவகத்தின் வேலையை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறுன அத்தகைய ஆட்களை ஊழியத்திலமர்த்தலாம்; அத்துடன்

(இ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலாம், வைத்திருக்கலாம், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கலாம் அல்லது கொடுக்கலாம், ஈடுவைக்கலாம், அடைவுவைக்கலாம், அத்துடன் விற்கலாம் அல்லது வேறுவிதத்தில் கையாளலாம்.

6. இச்சட்டம் தொடங்கும் தேதியன்று உள்ள (இலங்கை) வங்கித் தொழிலர் பயிற்சி நிறுவகத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் நிறுவகத்தின் கடன்களாகவும் பொறுப்புக்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று (இலங்கை) வங்கித் தொழிலர் பயிற்சி நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய எல்லா ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் நிறுவகத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

7. (1) சபையானது பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அக்கருமங்களுள் எவற்றிற்காகவும் அல்லது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அக்கருமங்களுள் எவை தொடர்பிலும் விதிகளை ஆக்கும் நோக்கத்துக்கெனக் கூட்டப்பட்ட சபையின் கூட்டமொன்றில் (சமுகமளிக்காதோர் உட்பட) சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாதவர்களைக் கொண்ட பெரும்பான்மையொன்றின்மூலம் விதிகளை ஆக்கலாம்:—

(அ) நிறுவகத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு ஆட்களுக்கிருக்கவேண்டிய தகைமைகள்; உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளும் முறையும் அவர்களைப் பற்றிய இடாப் பொன்றினைப் பேணிவருதலும்; உறுப்பினர்களினுற் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள் உறுப்பாண்மைக் காலமும், உறுப்பாண்மையைப் புதுப்பித்தலும், முடிவுறுத்தலும்; உறுப்பினர்களை வகைப்படுத்தலும் அவர்களைத் தேர்ந்தெடுத்தலும் அவர்களால் பட்டங்கள் பயன்படுத்தப்படுதலும்; உறுப்பினர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டினைப் பிரயோகித்தல்;

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

(ஆ) சபை உறுப்பினர்களைப் பெயர் குறித்து நியமித்தலும், தேர்ந்தெடுத்தலும்; சபை உறுப்பினர்களின் பதவிக்காலமும், தத்துவங்களும் பணிகளும், கடமைகளும்; சபைக் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண்ணும், அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின் அலுவல்களை நடாத்துதலும்;

(இ) நிறுவகத்தின் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும்; அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண்ணும், அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின் அலுவல்களை நடாத்துதலும்;

(ஈ) நிறுவகத்தால் ஏற்பாடு செய்யப்படும் தகைமைப் பரீட்சைகளுக்கும் போதனைநெறிகளுக்கும் மாணவர்களை அனுமதித்தலும், அவர்கள்மீது ஒழுக்காற்று கட்டுப்பாட்டினைப் பிரயோகித்தலும்; அத்தகைய பரீட்சைகளுக்கும் போதனை நெறிகளுக்கும் செலுத்தப்படற் பாலனவான கட்டணங்களும், அப்பரீட்சைகளையும் போதனை நெறிகளையும் நடாத்துதலும், அப்பரீட்சைகளுக்கும் போதனை நெறிகளுக்குமான பாடவிதானங்களும்; நிறுவனத்தின் பரீட்சைகளில் சித்தியடையும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதல்; நிறுவகத்தின் மாணவர்களுக்குப் பண வகையாகவோ அல்லது வேறுவகையாகவோ உதவியளித்தல்;

(உ) நிறுவகத்தின் ஆதனத்தை முகாமை செய்தல்; அதன் நிதிகளைக் கட்டுக் காவலில் வைத்திருத்தலும், பேணுதலும், கணக்காய்வு செய்தலும்;

(ஊ) நிறுவகத்தின் ஊழியர்களுக்கு ஊதியமளித்தலும் அவர்களின் மீது ஒழுங்காற்றுக் கட்டுப் பாட்டை பிரயோகித்தலும்

(எ) நிறுவகத்தின் இலச்சினையைக் கட்டுக்காவலில் வைத்திருத்தலும் பயன்படுத்துதலும், மெய்யென்று உறுதிப்படுத்துதலும் அத்துடன்

(ஏ) மேற்சொல்லப்பட்ட கருமங்களோடு சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களும்

(2) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலுவிலுள்ள(இலங்கை) வங்கித் தொழிலர் பயிற்சி நிறுவகத்தின் விதிகள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட, நிறுவகத்தின் விதிகள் எனக் கருதப்படல் வேண்டும்.

(8) இச்சட்டத்தில். சந்தருப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினுலொழிய—

''வங்கித்தொழில் நிறுவனம்'', ''வர்த்தக வங்கி'' என்பன பணச் சட்டத்தில் உள்ளவாறுன அதே பொருளை உடையனவாகும்; அத்துடன்

''இலங்கை மத்திய வங்கி''என்பது பணச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருளாகும்

# 1979 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டம்

*(1979, ஒகத்து மாதம் 8ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

பதிப்புரிமை, கைத்தொழில் வடிவ அமைப்புக்கள், ஆக்கவுரிமைகள், குறிகள், வியாபாரப் பெயர்கள் அத்துடன் நேர்மையற்ற போட்டி என்பன தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும், திரட்டுவதற்கும், திருத்துவதற்கும், சட்டக் கோவையொன்றின் வடிவத்தில் அமைப்பதற்கும், அவற்றைச் சிறந்த முறையில் பதிவுசெய்வதற்கும் அவற்றின் கட்டுப்பாட்டிற்கும், நிருவாகத்திற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

*55. (1) (அ) வெளிநாட்டில் உரிமைப் பணங்களைக் கொடுப்பனவு செய்தலை உட்படுத்தும்; அல்லது*

*(ஆ) வேறு சூழ்நிலைகளின் காரணமாக உரிம ஒப்பந்தம் தொடர்பாகும்,*

*ஏதேனும் உரிம ஒப்பந்தம் அல்லது அதன் திருத்தம் அல்லது புதுப்பித்தல் எதுவும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குத் தீங்கு விளைவிக்குமென நம்புவதற்குப் பதிவாளருக்குப் போதிய காரணமிருக்குமிடத்து அவர் அந் நிகழ்வு பற்றி மத்திய வங்கியின் ஆளுநருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கருமத்தின் மீதான முடிவொன்றுக்கு இயைபாகும் அவரது கட்டுக்காப்பிலுள்ள எல்லாப் பத்திரங்களையும் அனுப்புதலும் வேண்டும்.*

*(2) முதலாமுட்பிரிவின் கீழான அறிவித்தலெதுவும் இடைக்கப்பெற்றதன் மேல் மத்திய வங்கியின் ஆளுநர், சொல்லப்பட்ட உரிம ஒப்பந்தம் அல்லது அதற்கான திருத்தம் அல்லது புதுப்பித்தல் எதுவும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குத் தீங்கு விளைவிக்கும் எனப் பதிவாளருக்கு அறிவிக்குமிடத்து, பதிவாளர் இடாப்பில் அத்தகைய ஒப்பந்தத்தின் பதிவை நீக்கி அதனைச் செல்லுபடியற்றதாக்குதல் வேண்டும்.*

## 1979ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டம்

*[ 1979, செத்தெம்பர் மாதம் 25ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. ]*

நெற்காணிகளின் வாரப் பயிர்ச்செய்கையாளர்கள் அக்காணிகளில் ஆட்சி உரித்துக் கொண்டிருப்பதற்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; நிலக்கிழார்களுக்கு வாரப்பயிர்ச்செய்கையாளர்களால் செலுத்தப்படற்பாலதான வாடகையைக் குறித்துரைப்பதற்கும், கமத்தொழிற் பயிர்களையும், பண்ணைவிலங்குகளையும் தகுந்த முறையில் பயன்படுத்துவதன் மூலமும் முகாமை செய்வதன் மூலமும் நெற்காணிகளினதும் வேறு கமத்தொழிற் காணிகளினதும் விளைவுப்பெருக்கத்தைப் பெருமமாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; கமநலச் சேவைகட் குழுக்களைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; கமத்தொழில் காணிகள் தொடர்பிலான ஆட்சியுரித்துப் பிணக்குகளும் மற்றும் வேறு பிணக்குகளும் கமநலச் சேவைகள் ஆணையாளரால் தீர்மானிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; ஆணையாளருக்கு அல்லது அவர்மீது குறித்த சில தத்துவங்களையும், கடமைகளையும் அளிப்பதற்கும் சுமத்துவதற்கும்; பயிர்ச்செய்கை அலுவலர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; தேசிய அரசுப் பேரவையினது 1972ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, கமத்தொழில் விளைவுப்பெருக்கச் சட்டத்தையும், 1973ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, கமத்தொழிற்காணிகள் சட்டத்தையும் நீக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

### பாகம் II

### விதித்துரைக்கப்பட்ட வங்கிகளால் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களுக்கு ஏற்புடையனவான ஏற்பாடுகள்

27. (1) கமத்தொழிற்காணி எதனதும் சொந்தக்காணிப் பயிர்ச்செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர், ஏதேனும் கமத்தொழில் நடவடிக்கைக்காக, பொருளளவில் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருப்பதான சாதனம் ஒன்றினை இணைப்பிரதிகளில் எழுதி நிறைவேற்றுவதன் மூலமோ அல்லது அத்தகைய சாதனத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக விதித்துரைக்கப்பட்ட வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகள்மீது அத்தகைய காணியின் மேல் அல்லது அவர் சொந்தமாக வைத்திருக்கும் வேறேதேனும் ஆதனத்தின்மேல் அல்லது அவருக்கு அக்கறையொன்றிருக்கும் வேறேதேனும் அசைவற்ற ஆதனத்தின்மேல் ஈடு ஒன்றினை அல்லது பொறுப்பு ஒன்றினை ஏற்படுத்துவதன் மூலம் அத்தகைய காணி தொடர்பாக விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றிடமிருந்து கடனொன்றைப் பெறலாம்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான சாதனம் எதற்கும் முத்திரைக் கட்டளைச்சட்டத்திற்கான "அ" என்னும் அட்டவணையின்கீழ், அதே தன்மைத்தான முறியொன்றுக்காக அல்லது ஈடொன்றுக்காக விதிக்கப்படற்பாலதான தீர்வையின் ஐந்திலொரு பங்குக்குச் சமமான ஒரு முத்திரைத் தீர்வை மட்டுமே அறவிடற்பாலதாதல் வேண்டும். அத்தகைய தீர்வையானது சாதனத்தினது இணைப்பிரதிக்கெனச் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன் அத்தகைய சாதனத்தின் மூலப்பிரதி அல்லது இணையொத்த பிரதி முத்திரைத் தீர்வை ஏதேனும் இருப்பின், அதனினின்றும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) விதித்துரைக்கப்பட்ட வங்கி ஒவ்வொன்றும்—

(அ) இப்பிரிவின்கீழ் அத்தகைய வங்கியின் பெயருக்கு எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனங்களை, அவை எழுதி நிறைவேற்றப்பட்ட வரிசையில், தொடர்ச்சியாக இலக்கமிடுமாறு செய்வித்தல் வேண்டும்;

(ஆ) ஒவ்வொரு மாதமும் பதினைந்தாம் நாளுக்கு முன்னர், விதித்துரைக்கப்பட்ட அவ்வங்கியானது பணியாற்றும் மாவட்டத்தின் காணிப் பதிவாளருக்கு, முற்போந்த மாதத்தில் அத்தகைய வங்கியின் பெயருக்கு எழுதி நிறைவேற்றப்பட்டதான அத்தகைய எல்லாச் சாதனைகளின் இணைப்பிரதிகளையும் அத்தகைய சாதனங்களின் பட்டியல் ஒன்றுடன் சேர்த்து ஒப்படைத்தல் அல்லது அனுப்பி வைத்தல் வேண்டும்;

(இ) விதித்துரைக்கப்பட்ட வங்கியானது பணியாற்றும் மாவட்டத்தின் காணிப் பதிவாளருக்கு, ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக, முற்போந்த சனிக்கிழமையன்று முடிவடைந்ததான வாரத்தின்போது அத்தகைய வங்கியின் பெயருக்கு எழுதி நிறைவேற்றப்பட்டனவான அத்தகைய சாதனங்களின் பட்டியல் ஒன்றை ஒப்படைத்தல் அல்லது அனுப்பி வைத்தல் வேண்டும்;

(ஈ) அத்தகைய ஏதேனும் சாதனமானது, விதித்துரைக்கப்பட்ட வங்கி பணியாற்றும் மாவட்டமல்லாத வேறு ஏதேனும் மாவட்டத்தில் அமைந்துள்ள காணியை அல்லது அசைவற்ற ஆதனத்தைப்பற்றியதெனில், அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னதாக, அத்தகைய காணி அல்லது அசைவற்ற ஆதனம் அமைந்துள்ளதான மாவட்டத்தின் காணிப் பதிவாளருக்கு, அச்சாதனத்தின் பிரதி ஒன்றை இறுதியாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய மாவட்டத்தில் உள்ள காணிகள் தொடர்பான அல்லது அசைவற்ற ஆதனம் தொடர்பான அத்தகைய எல்லாச் சாதனங்களினதும் பட்டியல் ஒன்றுடன் சேர்த்து ஒப்படைத்தல் அல்லது அனுப்பி வைத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) அத்தகைய சாதனமானது அற்றோணித் தத்துவகாரர் ஒருவரினால் எழுதி நிறைவேற்றப்பட்டதாயின், அந்தச் சாதனத்தின் பிரதியொன்றுடன் சேர்த்து அத்தகைய அற்றோணித் தத்துவத்தின் பிரதியொன்றை அத்தகைய காணி அல்லது அசைவற்ற ஆதனம் அமைந்துள்ளதான மாவட்டத்தின் காணிப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சாதனம் கடனை வழங்கும் விதித்துரைக்கப்பட்ட வங்கிக்கிளையின் அல்லது அலுவலகத்தின் முகாமையாளருக்கு அல்லது அத்தகைய வங்கியில் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட பதவியை வகிக்கும் எவரேனும் ஆளுக்கு முன்னிலையிலும் ஆகக்குறைந்தது வேறு ஒரு சாட்சியின் முன்னிலையிலும் கையொப்பமிடப்படலாமென்பதுடன் அதுஎழுதி நிறைவேற்றப்பட்டமை, அவ்வங்கிக் கிளையின் அல்லது அலுவலகத்தின் முகாமையாளரால் அல்லது அத்தகைய வங்கியின் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட

பதவியை வகிக்கும் ஆளினால் உறுதிப்படுத்தவும்படலாம். அத்தகைய சாதனம் அவ்வாறு கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவிடத்து, மோசடித் தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் உள்ள எதுவும் அதற்கு ஏற் புடைத்தாதலாகாது.

(5) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சாதனம், காணி தொடர்பான சாதனமொன்றென்றாற் போன்று ஆவணப் பதிவுக் கட் டளைச்சட்டத்தின்கீழ்ப் பதியப்படலாம்.

(28) கமத்தொழிற் காணியின் சொந்தக்காணிப் பயிர்ச்செய்கையாள ரொருவருக்கு அல்லது இருப்பாட்சியாளரொருவருக்கு விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றினால் இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது 1973 ஆம் ஆண் டின் 42 ஆம் இலக்க, கமத்தொழிற் காணிகள் சட்டத்தின் நேரொத்த ஏற்பாடு களின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் ஏதேனும் பணத்தொகை யைச் செலுத்துவதில் தவணை தவறப்படுமிடத்து, அத்தொகை, முதல் என்ற வகையாக அல்லது வட்டி என்ற வகையாக அல்லது இரண்டினதும் வகையாக போமதியாகவிருந்தாலும் அத்தவணை தவறுகையானது, அக்கடனில் செலுத்தப் படாதுள்ள பாகம் முழுவதும், அதன்மீது போமதியான வட்டியும் தொடர் பாகச் செய் யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

29. (1) இந்தப் பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ், ஏதேனும் கடனில் கொடுத்துத்தீர்க்கப்படாதுள்ள அல்லது கடனடைக்கப்படாதுள்ள பாகம் முழு வதும், அத்துடன் அதன்மீது செலுத்தப்படவேண்டிய வட்டியும் தொடர்பாகத் தவணை தவறுகை செய்யப்படுமிடத்து அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படு மிடத்து, அத்தகைய கமத்தொழிற் காணியின் சொந்தக்காணிப் பயிர்ச்செய் கையாளர் அல்லது இருப்பாட்சியாளர், ஓர் அறிவித்தல் மூலம் அவ் அறிவித்த லில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையைச் செலுத்தத் தவறியுள்ளாரென ஆணையாளருக்கு, விதித்துரைக்கப்பட்ட வங்கி அறிவிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல், ஆணையாளர், கமத்தொழிற் காணியின் அத்தகைய சொந்தக்காணிப் பயிர்ச்செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர் அத்த கைய பணத் தொகையைச் செலுத்துவதில் தவறுகை புரிந்துள்ளாரா என்ப தைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக விசாரணையொன்றை நடாத்தலாம்.

(3) அத்தகைய விசாரணையில் கமத்தொழிற் காணியின் சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளரும் அல்லது இருப்பாட்சியாளரும், விதித்துரைக் கப்பட்ட வங்கியும் நேரில் அல்லது பிரதிநிதியொருவர் மூலம் தம்பக்கவழக்கை எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்றைப் பெறுதல் வேண்டும்.

(4) அத்தகைய விசாரணையில் கமத்தொழிற் காணியின் சொந்தக்காணிப் பயிர்ச்செய்கையாளரிடமிருந்து அல்லது இருப்பாட்சியாளரிடமிருந்து ஏதேனும் பணத்தொகை விதித்துரைக்கப்பட்ட வங்கிக்குப் போமதியாகவுள்ளதென ஆணையாளர் திருப்தியடையுமிடத்து, அத்தகைய கட்டளையில் குறித்துரைக் கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்துள் விதித்துரைக்கப்பட்ட வங் கிக்குப் போமதியாகவுள்ள பணத் தொகையைச் செலுத்துமாறு கமத்தொழிற் காணியின் அத்தகைய சொந்தக்காணிப் பயிர்ச் செய்கையாளருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அல்லது கமத்தொழிற் காணியின் அத்தகைய சொந் தக்காணிப் பயிர்ச் செய்கையாளரது அல்லது இருப்பாட்சியாளரது எவரேனும் பின்னுரிமையாளருக்கு அல்லது சட்டமுறையான பிரதிநிதிக்கு ஆணையாளர் கட்டளையிடுதல் வேண்டும்.

(5) கமத்தொழிற் காணியின் சொந்தக்காணிப் பயிர்ச் செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர் விதித்துரைக்கப்பட்ட வங்கிக்கு அவர் செலுத்த வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தொகை தொடர்பாக (4) ஆம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட கட்டளையொன்றிற்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து அல்லது இணங்கியொழுக மறுக்குமிடத்து, அத்தகைய கமத்தொழிற் காணிப்பரப்பு அமைந்திருக்கும் இடத்தின்மேல் நியாயாதிக்கமுடைய நீதிவான் நீதிமன்றத்திற்கு விதித்துரைக்கப்பட்ட வங்கியின் சார்பில் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அத்தகைய தொகை அந்த நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடியதான குற்றப்பணத்தொகையை விஞ்சுகின்றது என்பது எப்படியிருப்பினும், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப் பணமொன்றென்றாற்போன்று அதே வகையாக அத்தகைய பணத்தொகை அறவிடப்படலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தவணைதவறியவரிடமிருந்து அதில் குறித்துரைக்கப்பட்ட தொகை அத்தகைய வங்கிக்குப் போமதியாகவுள்ளதெனப் பொருள்பட, விதித்துரைக்கப்பட்ட வங்கியினால் அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் கைப்பட அமைந்த சான்றிதழொன்று, அத்தகைய தவணைதவறியவரிடமிருந்து அத்தகைய தொகை வங்கிக்குப் போமதியாகவுள்ளதென்பதற்கான முடிவான சான்றாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய இருப்பாட்சியாளர் வாரப்பயிர்ச் செய்கையாளரொருவராயிருந்து, அத்துடன், விதித்துரைக்கப்பட்ட வங்கியானது (5) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில் அத்தகைய பணத்தொகையை அறவிடுதல் சாத்தியமற்றது அல்லது உசிதமற்றதென ஆணையாளருக்கு அறிக்கை செய்துள்ளவிடத்து, ஆணையாளரானவர், ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில் அத்தகைய பணத்தொகையை அறவிட வியலாதென திருப்திப்பட்டதன்மேல், அத்தகைய பணம் விதித்துரைக்கப்பட்ட வங்கிக்குச் செலுத்தப்படும்வரை அத்தகைய தவணை தவறியவரின் குடிவார உரிமைகளை இடைநிறுத்திவைக்கலாம்.

30. அப்போதைக்கு வலுவிலுள்ளதான ஏதேனும் சட்டத்தில் முரணானது எது எவ்விதமிருப்பினும், கமத்தொழிற் காணியின் எவரேனும் சொந்தக் காணிப் பயிர்ச் செய்கையாளருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு, விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில், விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றின் பெயரில் ஏதேனும் காணியின்மீது அல்லது அதனகத்தமைந்த அக்கறைமீது உருவாக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு அல்லது ஈடு விதித்துரைக்கப்பட்ட வங்கியின் பெயரில் எத்தேதியன்று அப்பொறுப்பு அல்லது ஈடு உருவாக்கப்பட்டதோ அத்தேதிக்கு முன்னர் அத்தகைய காணிமீது அல்லது அதனகத்தமைந்த அக்கறைமீது எவரேனும் ஆளின் பெயரில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடியதான வேறு ஏதேனும் பொறுப்புக்கு அல்லது ஈட்டுக்கு மேலாக முந்துனுரிமையுடையதாயிருத்தல் வேண்டும்.

31. இருபத்தொன்பதாம் பிரிவில் உள்ளது எதுவும், விதித்துரைக்கப்பட்ட வங்கி, அதற்குப் போமதியாகவுள்ள தொகையை எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அறவிடுவதைத் தடுப்பதாகக் கருதப்படுதலாகாது.

32. கடன் இணக்கக் கட்டளைச்சட்டத்தில் உள்ள எதுவும் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட வங்கிக்கு போமதியாகவுள்ள ஏதேனும் தனிசுக்கு ஏற்புடையதாதலோ அல்லது ஏற்புடையதாகக் கருதப்படுதலோ ஆகாது; அல்லது, ஏதேனும் அத்தகைய தனிசை அறவிடுதல் தொடர்பாக ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட வங்கியின் உரிமைகளுக்குப் பங்கம் விளைவிப்பதாக அல்லது அவைகளைப் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது.

## 1979ஆம் ஆண்டின் 71ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

*(1979, திசெம்பர் மாதம் 22ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

1980ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ வெளிநாடுகளிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், குறித்த நிதியாண்டில் அரசாங்கத்தின் சில முயற்சிகள் சம்பந்தமாக நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு, குறித்த நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அலலது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச்செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அப்பணங்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், முற்கூறிய கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்.

*1. இச்சட்டம் 1979ஆம் ஆண்டின் 71ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. (1) இச்சட்டத்தில் ''1980ஆம் நிதியாண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் 1980ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் தேதி தொடங்கி 1980ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலத்துக்கான சேவைக்காக இரண்டாயிரத்தி நாற்பத்தி ஐந்து கோடியே ஐம்பத்தெண்ணுயிரத்தி அறுநூற்றெட்டு ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத்தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி —*

*(அ) திரட்டு நிதியத்தினின்று அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறெந்த நிதியத்தினின்று அல்லது பணங்களினின்று வழங்கப்படுமாறு இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளினின்றும்; அத்துடன்*

*(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்படும்படி இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியினின்றும், (எவ்வாறுயினும், அததகைய வரும்படியின் கூட்டு மொத்தத் தொகை ஆயிரத்திநூற்றி இருபது கோடியே ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படலாகாது),*

*பெறப்படல் வேண்டும்.*

*இதன்கண் முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இரண்டாயிரத்தி நாற்பத்தி ஐந்து கோடியே ஐம்பத்தெண்ணுயிரத்தி அறுநூற்றெட்டு ரூபாக் கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.*

*(2) இப்பிரிவின் 1ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலுள்ள வேறு எந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் பங்கமின்றிப் பயனுடையன வாதல் வேண்டும்.*

3. (1) இரண்டாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின் போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகள். இத்தகைய முயற்சியின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்; ஆனால், அவ்வாறு வரவு வைக்கப்பட்ட வரவுகளின் கூட்டு மொத்தத் தொகை அந்த அட்டவணையின் IIIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது. அத்தகைய முயற்சியினின்று அத்தகைய ஆகக்கூடிய எல்லைக்கு மேலாகப் பெறப்படும் வரவுகள் எவையும் திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின்போது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின் பேரிலும் அரசாங்கத்தால் உறப்படும் செலவினம். அந்த நிதியாண்டின்போது அத்தகைய முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து கொடுபடுதல் வேண்டும்; ஆனால் அத்தகைய செலவினம், அந்த அட்டவணையின் IIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

(3) இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின் முடிவில் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியினின்றும் நிலுவையாகவுள்ள பற்று மீதி, அந்த அட்டவணையின் IVஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது; அத்துடன் அந்த நிதி ஆண்டின் முடிவில் அந்த முயற்சி மொத்தப் பொறுப்புகள், அந்த அட்டவணையின் Vஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது

4. இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டில் எப்போதேனும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்த முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகைய முயற்சியின்மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களுக்குப் போதியனவாயிராவிடின், அமைச்சர். அத்தகைய செலவினத்திற்கு அவசியமெனத் தம்மாற் கருதப்படும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களில் இருந்து கொடுக்கப்படுதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம் கட்டளைமூலம் பணிக்கலாம் எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகையின் கூட்டு மொத்தத்தொகை அந்த அட்டவணையின் IIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிலில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும் அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாக கொடுக்கப்பட்ட எப்பணத் தொகைகளும் அமைச்சராற் கட்டளைமூலம் பணிக்கப்படக்கூடியமுறையில் திரட்டு நிதியத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனாக அவ் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழுந் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்

லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப் பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளைமூலம் அதே நிகழ்ச்சித்திட்டத் திற்கு உட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்திற்கொளச் செய்யும் பகிர்வுக்கு அல்லது அதே தலைப்பிற்கு உட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்வரும் மீண்டுவருஞ் செலவினம் அல்லது ஆக்கப்பொருட் செலவினம் என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின்கீழுள்ள எந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் ஆக்கப்பொருட் செலவுக்குப் பகிரப்பட்டுள்ள எப்பணங்களும் அப்பகிர்விலிருந்து வேறெதற் கும் மாற்றப்படலாகாது.

௬. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற் கென எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவா யிருக்குமென ; அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முத லில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்பட மாட்டாவென,

அமைச்சர் திருப்தியடையுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங் கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து, அவரால வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவை யேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப்பெறலாம்.

7. இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் IIஆம் நிரையிலும் IVஆம் நிரையிலும் Vஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும் அல்லது III ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளுள் எதனையும் அமைச்சர், அரசாங்கத்தின் அங்கீகாரத் தோடு, 1981 மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம் அத்தகைய எந்தக் கட்டளை யும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், இதன்கண் குறிப்பிடப்பட் டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண் டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின்மூலம் இச்சட்டத்திற்கான இரண் டாம் அட்டவணையை, அவ்வட்டவணையின் தோதான நிரைக்கு ஏதேனும் முயற்சியையும் அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் சேர்ப்பதன் மூலம், திருத்த லாம்.